# இலக்கு

இதழ் 60

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

வாராந்த மின்னிதழ்

ஜனவரி 12, 2020

GLOBAL TAMIL MEDIA CENTER, USA

Ilakku2009@gmail.com www.ilakku.org www.facebook.com/ilakku.ilakku.10 https://twitter.com/Ilakku1




## அனைத்து தமிழ் உறவுகளுக்கும் தைப் பொங்கல் வாழ்த்துக்கள்



## "ரீச்சர் இன்றைக்கு நான் சாப்பிடல. வீட்டை சமைக்க ஒன்றும் இல்லை. அதனால் அப்படியே வந்து விட்டேன்..!"

முல்லை மாவட்டத்தில் பசியில் வாடும் மாணவர்களின் சோகக் குரல்...

## "சேவை செய்வதுதான் உண்மையான இன்பம் உண்மையான இன்பத்தை உணரக் கற்றுக்கொள்"

மாவீரர் கேணல் கிட்டு





## விடுதலை உணர்வை எமது இளைஞர்களிடம் விதைக்கவில்லையெனில் அது தமிழ் சமூகத்திற்கு நாம் செய்யும் துரோகம்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன்

நேர்காணல்

## பொருளாதார அரசியல் – தமிழ் மக்கள் கருத்தில் எடுக்கவேண்டிய தருணமிது

வேல்ஸ் இல் இருந்து **அருஸ்**





தமிழ் தேசிய இலக்கை நோக்கிய தாயகம், தமிழகம் மற்றும் அனைத்துலக செய்திகள், ஆய்வுகள் என்பவற்றை தினமும் எமது இலக்கு இணைய தளத்தில் பார்வையிட தவறாதீர்கள் !

**www.ilakku.org**

# டெங்கு நோயினால் சிறீலங்காவில் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டோர் பாதிப்பு



சிறீலங்காவில் வேகமாகப் பரவி வரும் டெங்கு நோயினால் இதுவரையில் 100,493 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தொற்று நோய்க்கு உள்ளாகியவர்களில் 125 பேர் இதுவரையில் பலியாகியுள்ளனர். கடந்த 10 வருடங்களில் இரண்டு தடவைகள் பாதிப்புக்குள்ளாகியவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்தை தாண்டியுள்ளது.

2017 ஆம் ஆண்டு 186,101 பேர் டெங்கு நோயின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டிருந்தனர். தற்போது பரவிவரும் டெங்கு நோயின் தாக்கத்தில் சிறீலங்காவின் தலைநகர் கொழும்பே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது. இதுவரையில் கொழும்பில் 20,183 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த நவம்பர் மாதம் மட்டும் 21,183 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பொதுமக்கள் தமது வாழ்விடங்களையும், பணியிடங்களையும் சுத்தமாக வைத்திருக்குமாறும், நோயை பரப்பும் நுளம்புகள் பெருகுவதை தடுக்குமாறும் சிறீலங்கா சுகாதாரத் திணைக்களம் பொதுமக்களைக் கேட்டுள்ளது.

இதனிடையே, தமிழீழ நடைமுறை அரசு இயங்கிய காலத்தில் அவர்களின் நிலப்பரப்பில் டெங்கு நோய் முற்றாக ஒழிக்கப்பட்டிருந்ததும், அதற்கு உரிய பணிகளை தமிழீழ சுகாதார திணைக்களம் மக்களுடன் இணைந்து மேற்கொண்டிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## பறக்கும் சவப்பெட்டிகளை மீண்டும் வாங்குகின்றது சிறீலங்கா



சீனாவிடம் இருந்து மேலும் இரண்டு Y-12 ரக விமானங்களை கொள்வனவு செய்யவுள்ளதாக சிறீலங்கா அரசு தெரிவித்துள்ளது.

சீனாவின் கெர்பின் குழுமத்திடம் இருந்து ஒவ்வொன்றும் 3 மில்லியன் டொலர்கள் பெறுமதியான இரண்டு y-12 விமானங்களை சிறீலங்கா கொள்வனவு செய்கின்றது.

கடந்த வாரம் சிறீலங்காவின் கப்புத்தளை பகுதியில் சிறீலங்கா வான்படையின் y-12 ரக விமானம் வீழ்ந்து நொருங்கியதால் அதில் பயணம் செய்த 5 வான்படையினர் கொல்லப்பட்டிருந்தனர்.

பொது மக்களுக்கான உள்நாட்டு பயணிகள் விமானமாகவும் பயன்படுத்தப்படும் இந்த விமானம் பறப்பதற்கான முறையான பாதுகாப்புச் சான்றிதழ் அற்ற விமானம் என கொழும்பு தகவல்கள் தெரிவித்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, உள்ளூர் விமான சேவைகளுக்கு சிறீலங்கா அரசு பயன்படுத்தும் அன்ரனோவ் மற்றும் y-12 ரக விமானங்கள் முறையான பராமரிப்பு அற்றவை எனவும், அவை பாதுகாப்பு அற்றவை எனவும் தெரிவித்துள்ள தனது பெயரை குறிப்பட விரும்பாத அதிகாரி ஒருவர், இந்த விமானங்கள் பறக்கும் சவப்பெட்டிகள் என தெரிவித்துளார்.

# சிறீலங்கா மீது ஒரு பொருளாதார அழுத்தத்திற்கு தயாராகின்றதா மேற்குலகம்?

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திற்கு பதிலாக வேறு ஒரு சட்ட மூலத்தை கொண்டு வருவது என்ற தனது வாக்குறுதியை சிறீலங்கா நிறைவேற்ற வேண்டும், அதனை நீக்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையிலேயே ஐரோப்பிய ஒன்றியம் ஜி.எஸ்.பி வரிச்சலுகையை சிறீலங்காவுக்கு வழங்கியிருந்ததாக மனித உரிமை கள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அதன் தென்னாசியாப் பிராந்திய பணிப்பாளர் மீனாட்சி கங்குலி கடந்த வெள்ளிக்கழமை (10) மேலும் தெரிவித்துள்ளதாவது:

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திற்கு பதிலாக பரிந்துரை செய்யப்பட்ட சட்ட மூலத்தை கைவிடப் போவதாக சிறிலங்கா அரச தலைவர் கோத்தபாயா ராஜபக்சா தெரிவித்துள்ளார்.

அந்த சட்ட மூலம் ஐக்கிய நாடுகள் சபையினதும், ஐரோப்பிய ஒன்றியத்தினதும் பரிந்துரைகளின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டது.

அதுமட்டுமல்லாது, மனித உரிமை செயற்பாடுகளைப் பாதிக்கும் நடவடிக்கைகளையும் அவர் மேற்கொண்டு வருகின்றார். போரின் போது பொது மக்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டு அதிகளவில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர் பாதுகாப்புச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளதுடன், அவ்வாறான பலர் உயர் பதவிகளில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

காவல்துறை மற்றும் பொது அமைப்புக்களும் பாதுகாப்பு அமைச்சின் கீழ்





கொண்டுவரப்பட்டுள்ளது. பொதுமக்கள் புலனாய்வுத்துறையின் அதிகாரியாக படையில் உள்ளவர் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் பதவி விலகவில்லை.

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தை மைத்திரிபால சிறீசேன அரசு 2015ஆம் ஆண்டு ஏற்றுக் கொண்டிருந்தது. ஆனால் அதனை கைவிட தற்போதைய அரசு தீர்மானித்துள்ளது.

முன்னைய அரசின் செயற்பாடுகளுக்கு அமைவாகவே ஐரோப்பிய ஒன்றியம் சிறிலங்காவுக்கான ஜி.எஸ்.பி வரிச்சலுகையை மீண்டும் வழங்கியிருந்தது. ஆனால் அது வழங்கப்பட்டதற்கான நிபந்தனைகள் தற்போது மீறப்படுகின்றது.

2010 ஆம் ஆண்டு புதிதாகப் பதவியேற்ற சிறீலங்காவின் அன்றைய அரச தலைவர் மகிந்த ராஜபக்சா அரசு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை தொடர்ந்து பேணப் போவதாக தெரிவித்ததைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியம் தனது வரிச்சலுகையை நீக்கியிருந்தது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் இந்த அறிக்கையானது ஐரோப்பிய ஒன்றியம் மீண்டும் ஜி.எஸ்.பி வரிச்சலுகையை விலக்கிக் கொள்ளும் சந்தர்ப்பம் ஒன்று உருவாகி வருவதை காண்பிப்பதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

# சிறீலங்கா வருகிறார் அமெரிக்கா அதிகாரி ஈரான் ஜெனரல் கொலை தொடர்பில் சிறீலங்கா அரசு குழப்பம்



தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்காவின் முக்கிய அதிகாரியான ஆலிஸ் ஜி வெல்ஸ் அடுத்த வாரம் இரு தரப்பு சந்திப்புகளுக்காக இலங்கை மற்றும் இந்தியாவுக்கு வரவுள்ளார்.

அவர் தனது தெற்காசியப் பயணத்தை இலங்கையிலிருந்து தொடங்க உள்ளார். அவர் நாளை மறுதினம் கொழும்பில் இருப்பார்.

தனது சந்திப்புகளின்போது, மூத்த அரச அதிகாரிகள் மற்றும் சிவில் சமூகத்தின் உறுப்பினர்களைச் சந்தித்து, இரு தரப்பு மற்றும் பிராந்திய பிரச்சினைகள் குறித்து விவாதிப்பார். இதில் சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ- --- பசிபிக் பிராந்தியத்தில் பகிரப்பட்ட நலன்கள், வளர்ச்சி, ஜனநாயகம், நீதி மற்றும் மனித உரிமைகள் விவகாரங்கள் குறித்துப் பேசப்படும். இலங்கைப் பயணத்தின் பின்னர், வெல்ஸ் ஜனவரி 15 – 18 ஆம் திகதிகளில் இந்தியாவில் தங்கியிருப்பார். பின்னர், ஜனவரி 19 - 22 ஆம் திகதிகளில் அவர் இஸ்லாமாபாத் செல்வார்.

இதனிடையே ஈரான் இராணுவ ஜெனரல் கொல்லப்பட்டது தொடர்பில் சிறீலங்கா அதிகாரிகள் தெரிவித்துவரும் கருத்துக்கள் குறித்து கொழும்பில் உள்ள அனைத்துலக இராஜதந்திரிகள் குழப்ப மடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஈராக்கின் பக்தாத் விமான நிலையத்தில் வைத்து ஈரான் இராணுவ ஜெனரல் அமெரிக்காவின் ஆளில்லாத தாக்குதல் விமானம் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்டிருந்தார்.

இந்த படுகொலை தொடர்பில் கருத்து தெரிவித்திருந்த சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சகம் மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள நிலை தொடர்பில் கவலை அடைந்துள்ளதாகவும் எல்லா தரப்பும் அமைதிகாக்க வேண்டும் எனவும் தெரிவித்திருந்தது.

ஆனால் அமெரிக்கா மேற்கொண்ட படுகொலையை தாம் கண்டிப்பதாக சிறிலங்காவின் கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெருமா கடந்த வியாழக்கிழமை (9) சிறீலங்கா நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இந்த படுகொலை உத்திகளை ஏனைய நாட்டுத் தலைவர்களும் பின்பற்றலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவில் உள்ள ஈழத் தமிழர்களை படிப்படியாக அகற்ற திட்டம்?



இந்த வாரம் இந்தியாவுக்கு சென்றுள்ள சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தன இந்தியா வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் உடன் மேற்கொண்ட பேச்சுக்களை தொடர்ந்து இந்தியாவில் தங்கியுள்ள 3000 புலம்பெயர் தமிழ்மக்கள் நாடு திரும்பவுள்ளதாக சிறீலங்கா அமைச்சர் தெரிவித்துள்ளார்.சிறீலங்காவில் இடம்பெற்ற போரின் போது, சிறீலங்கா அரச படையினரின் தாக்குதலிகளில் இருந்து உயிர் பிழைப் பதற்காக இந்தியாவுக்குச் சென்ற தமிழ் மக்களில் 80,000 பேர் தற்போதும் அங்குள்ள முகாம்களில் தங்கியுள்ளனர்.

இந்தியா புதிதாகக் கொண்டு வந்த குடியுரிமைச் சட்டத்திலும் சிறீலங் காவில் இருந்து தமிழகம் சென்று பலகாலம் தங்கியிருந்த தமிழ் மக்கள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் இந்தியாவிற்கு முதல் தடவையாக சென்றுள்ள சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் தமிழ் மக்கள் சிறீலங்கா திரும்பவுள்ளதாக தெரிவித்துள்ளது குறிப்பிட த்தக்கது.

முதல் கட்டமாக வயதானவர்களே சிறீலங்காவுக்கு திரும்பவுள்ள தாகவும், அவர்கள் எதிர்வரும் மாதம் திரும்புவார்கள் எனவும் தெரிவிக்கப் படுகின்றது.

இதனிடையே, இந்திய மத்திய அரசு கொண்டுவந்துள்ள குடியுரிமை திருத்தச் சட்டம் ஜனவரி 10ஆம் திகதி முதல் அமுலிற்கு வருவதாக அரசிதழில் வெளியடப்பட்டுள்ளது. ஆனால் இந்த சட்டத்திற்கான விதிகள் இதுவரை வடிவமைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.


இந்திப் பிரதமர் மோடி தலைமையிலான பாஜக அரசு வெளிநாட்டில் இருந்து இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ள இஸ்லாமிய அகதிகளை மீண்டும் சொந்த நாட்டிற்கே திருப்பி அனுப்பும் வகையில் குடியுரிமை திருத்தச் சட்டம் கொண்டு வந்துள்ளது. மேலும் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் வங்கதேச நாடுகளில் இருந்து குடிபெயர்ந்து வந்துள்ள இந்துக்கள், சீக்கியர்கள், புத்த மதத்தவர்கள், ஜெயின்கள், பார்சிகள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு இந்தியாவில் குடியுரிமை வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

இந்த திருத்த சட்ட மசோதா கடந்த ஆண்டு(2019) டிசம்பர் 11ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, குடியரசுத் தலைவரின் ஒப்புதலுடன் 21019 குடியுரிமை திருத்தச் சட்டம் நாட்டில் ஜனவரி 10ஆம் திகதி (2020) முதல் நடைமுறைக்கு வந்தது.

இந்த நிலையில், இந்திய குடியுரிமை வழங்கப்படும் சட்டம் நாட்டில் ஜனவரி 10ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்தது என்று அரசிதழில் வெளியாகியுள்ளது. இந்த அறிவிப்பை இந்திய மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தச் சட்டத்திற்கு எதிராக நாடு முழுவதும் கடுமையான போராட்டம் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் நடந்து வரும் வேளையில், இந்தச் சட்டத்தில் இருந்து ஒரு அங்குலம்கூட பின்வாங்க மாட்டோம் என்று மத்திய உள்துறை அமைச்சர் தெளிவுபடுத்தியிருந்த நிலையில், அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

## உணவுப் பொருட்களின் விலை ஐந்து மடங்கு அதிகரிப்பு - ஐ.நா



உணவுப் பொருட்களின் விலை உலகில் ஐந்து மடங்கு அதிகரித்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாயத்திற்கான அமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை (9) வெளியிட்டுள்ள அதன் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டு ள்ளதாவது:

உணவுப் பொருட்களின் விலைச் சுட்டெண் இந்த மாதம் 2.5 புள்ளியால் அதிகரித்துள்ளது. தாவர எண்ணை, சீனி மற்றும் பால் பொருட்களின் விலையே அதிகம் உயர்ந்துள்ளது. கடந்த மாதம் இந்த பொருட்களின் விலைச்சுட்டெண் 181.7 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த வருடம் விலைச் சுட்டெண் 171.5 ஆக இருந்ததுடன், தாவர எண்ணையின் விலைச்சுட்டெண் கடந்த மாதம் மிகவும் அதிகரித்துள்ளதாகவும், இது கடந்த 25 மாதங்களுடன் ஒப்பிடும்போது மிகவும் அதிகமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலக்கு — சிங்களவர் விரும்பும் தீர்வு?

இனநெருக்கடிக்கான 'தீர்வு' (?) எவ்வாறானதாக அமையும் என்பதை சிறிலங்கா அரசின் முக்கிய தலைவர்களான கோத்தாபய ராஜபக்ஷவும், மகிந்த ராஜபக்ஷவும் வெளிப்படையாகக் கூறிவிட்டார்கள். தனிச் சிங்கள வாக்குகளால் தான் தெரிவு செய்யப்பட்டவர் என்ற முறையில், சிங்களவர்கள் விரும்பாத எதனையும் தன்னால் வழங்க முடியாது என்பதை கோத்தாபய இந்தியாவில் வைத்தே சொல்லிவிட்டார். இப்போது "சிங்களவர்கள் விரும்பும் தீர்வையே தருவோம்" என மகிந்த ராஜபக்ஷ கூறியிருக்கின்றார்.

கோத்தாபய ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற போதே இதுதான் நடைபெறும் என்பது வெளிப்படையாகவே தெரிந்திருந்தது. ஆனால், இந்தியாவும், சர்வதேச சமூகமும் அழுத்தம் கொடுக்கும் நிலையில் கூட, இராணுவ - பேரினவாத நிலைப்பாட்டில் இருந்து கொண்டுதான் இனநெருக்கடியை கோத்தாபய அணுகுவார் என்பதும், அதனை அவர் பகிரங்கமாகவே சொல்வார் என்பதும் ஆச்சரியமானதுதான். வழமையான "பேச்சுவார்த்தைகள்" மூலமாக ராஜபக்ஷக்களை இனிமேல் கையாள முடியாது என்பதை அவர்களுடைய அணுகுமுறை உணர்த்துகின்றது.

பாராளுமன்றக் கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து தனது கொள்கை விளக்க உரையை கடந்த வாரம் நிகழ்த்திய கோத்தாபய, இனநெருகடி குறித்தோ, இலங்கைத் தீவில் ஒரு தேசியப் பிரச்சினை இருப்பது குறித்தோ எதனையும் சொல்லவில்லை. அதாவது - அவரது நிகழ்ச்சி நிரலில் அதற்கான தீர்வு இருக்கப்போவதில்லை. தீர்வு இருக்கப்போவதில்லை என்றால் பேச்சுவார்தைகளுக்கான கதவுகளும் திறக்கப்போவதில்லை. கூட்டமைப்புத் தலைமைக்கு காத்திருப்பதைவிட வேறு தெரிவுகள் இருக்கப்போவதில்லை.

இரண்டு விடயங்களை மட்டுமே கோத்தாபய தனது கொள்கை விளக்கத்தில் வலியுறுத்தினார். ஒன்று - ஒற்றை ஆட்சியைத் தொடர்ந்தும் பாதுகாப்பேன். இரண்டு - பௌத்த மதத்துக்கான முன்னுரிமையைத் தொடர்ந்தும் பாதுகாப்பேன். இந்த இரண்டு விடயங்களிலும்தான் தனது திடசங்கற்பத்தை கோத்தாபய வெளிப்படுத்தினார். ஒற்றையாட்சி முறையைக் கடுமையாகப் பின்பற்றும் பௌத்த நாடாக இலங்கைத் தீவு இருக்கும் என்பதுதான் அவரது பிரகடனம். முன்னைய ஜனாதிபதிகளும் இதனைத்தான் செய்தார்கள். ஆனால், கோத்தா சற்று கடுமையாகச் செல்லப் போகின்றார் என்பது தெரிகின்றது.

கோத்தாவின் கொள்கை விளக்கத்துக்குப் பதிலளித்த சம்பந்தன் சொன்னது பழைய கதையாகத்தான் இருந்தது. "அதிகாரப் பகிர்வு குறித்து சிந்தித்தால் மட்டுமே அபிவிருத்தி சாத்தியமாகும். தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு அரசு செவிமடுக்க வேண்டும். அப்போது தான் சர்வதேச முதலீடுகள், அபிவிருத்திகள் என அனைத்தையும் பெற்றுக்கொள்ள முடியும்" என்ற சம்பந்தனின் கருத்து, கோத்தாவின் காதுகளுக்கு ஏறியிருக்காது. இவ்வாறான கதைகளைக் கேட்கும் மனநிலையிலும் அவர் இல்லை.

ஆனால், இதற்கு மகிந்த பதலளித்திருக்கின்றார். "சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தப்புக் கணக்குப் போடக்கூடாது. போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு அபிவிருத்திதான் மிகவும் அவசியம். பொதுத் தேர்தலின் பின்னர் அரசியல் தீர்வுக்கான எமது பணிகள் ஆரம்பமாகும். மூவின மக்களுக்கும் சம உரிமையுடனான தீர்வை நாம் பெற்றுக் கொடுப்போம். அந்தத் தீர்வு சிங்கள மக்கள் விரும்புகின்ற தீர்வாக இருக்கும்" என்பதுதான் மகிந்தவின் பதில்.

சிங்கள மக்கள் விரும்புகின்ற தீர்வைத்தான் தருவோம் என்றால், பேச்சுவார்த்தை ஒன்றுக்குச் செல்ல வேண்டிய அவசியமே இல்லை. இப்போதிருக்கும் நிலை இன்னும் மோச மடையலாம். அதாவது, சிறுபான்மையினருக்கு ஆபத்தான ஒரு நாடாக இலங்கைத் தீவு சென்றுகொண்டிருக்கின்றது என்பதை இந்தச் சம்பவங்கள் உணர்த்துகின்றன.

வரப்போகும் பாராளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப்பெற்று, அரசியலமைப்பை தமது அதிகாரத்தைப் பலப்படுத்துவதற்கேற்றவாறு மாற்றியமைத்துக் கொள்வதுதான் ராஜபக்ஷக்களின் திட்டம். அதாவது ஒரு சர்வாதிகார ஆட்சியை நோக்கி நாடு செல்லப் போகின்றது. இதற்கான ஆணையை சிங்கள மக்கள் வழங்குவார்கள் என ராஜபக்ஷக்கள் எதிர்பார்க்கின்றார்கள். சர்வதேச சமூகம் இவ்விடயத்தில் எவ்வாறான எதிர்வினையாற்றப்போகின்றது?

**- ஆசிரியர்**



# மதம் சார் பண்டிகையல்ல மானத் தமிழினப் பொங்கல் பெருவிழா

தமிழீழத்தில் தமிழீழ நடைமுறை அரசு இருந்த காலத்தில் தைத்திருநாள் மதசார்பற்ற தேசிய பெருவிழாவாக பிரகடனப்படுத்தப்பட்டு கொண்டாடப்பட்டு வந்தது.

இன்று தமிழ் மக்கள் கொண்டாடும் பெரும்பாலான பண்டிகைகள் ஆரிய, ஐரோப்பிய அல்லது அரேபிய கலாச்சாரத்தின் அடிப்படையில் அமைந்திருக்க, தைத்திருநாள் மாத்திரமே பண்டைய தமிழரின் பண்டிகை





களில் தப்பிப் பிழைத்து நிற்கும் ஒன்றாக திகழ்கின்றது.
எனவே தான் தமிழீழ நடைமுறை அரசு அன்று தைத்திருநாளை தனது தேசிய பெருவிழாவாக முதன்மைப்படுத்தியிருந்தது. இதன் போது தமிழினத்தின் பாரம்பரிய விளையாட்டுக்கள் மற்றும் கலாச்சார நிகழ்வுகள் இடம்பெறுவது வழமையாகும்.

உலகத் தமிழினம் தைத்திருநாளை இனத்தின் எழுச்சி மிக்க முதன்மைத் திருநாளாக முன்னிலைப்படுத்த முன்வர வேண்டும்.

ஆங்கிலப் புத்தாண்டின் ஆரவாரங்கள்
ஓய்ந்திடப் போகின்ற ஒருகாலச் சூழலில்
வாங்கிய திருக்கடன் வங்கியின் வரவுக்குள்
சேர்ந்து சிரிக்கின்ற செழிப்பான வாழ்வினில்
ஓங்கு தைப்பொங்கலின் ஒரு தமிழ்ப் பண்பாட்டை
ஏந்திட நிற்கின்ற என்னரும் உறவுகாள்!
நீங்கிடும் இன்னல்கள்.. நிலவிடும் அமைதியென்
றேங்கிடும் இதயங்காள்! ஏர்கொண்ட உழவர்காள்!
தேங்கிய வாழ்வதன் தேரோட்டம் தொடர்ந்திடத்
தூங்காமற் துவளாமல் உழைக்கின்ற தோழர்காள்!

இயந்திர இயக்கத்திற் சுழன்றிடும் உலகினில்..
வியந்திட வளர்ந்திடும் விஞ்ஞான வளர்ச்சியில்..
சுயந்தனை இழக்காது சுதந்திர உணர்வோடு
உயர்ந்திட முயன்றிடும் ஒப்பற்ற மனிதர்காள்!

புலம்பெயர்ந்தாலும் உளம் பெயராது
பலங்கொண்ட குடியெனப் பாரெலாம் வதிந்து
இளந்தலை முறையின் எதிர்காலம் ஒன்றே
நிரந்தரம் என்று நீள்தவம் இயற்றி
வளம்பல பெருக்கிடும் எம்தமிழ்க்குடியே!
வாழிய என்றுமை வாழ்த்தி மகிழ்கிறேன்!

பூங்குயில் கூவிடப் புள்ளினம் பாடிடப்..
பொன்னொளிக் கதிர் வீசிப் பகலவன் புறப்பட.
மூங்கிலின் முகப்போடு முற்றத்தில் மாக்கோலம்....
முழுமையை விளக்கிட முன்வைத்த அருட்கும்பம்
தீங்கனி கரும்பொடு  மாவிலை தோரணம்
;தோன்றிடத் தாய்க்குலம் துரிதமாய்க் கடன் செயத்
தூங்கிய பாலர்கள் இளைஞர்கள் யுவதிகள்
துள்ளியே எழுந்தோடித் துடிப்புடன் குளித்துப் பின்
தாங்கள் தம் வெடி வாண வேடிக்கை தொடர்ந்திட....
ஆங்கொரு பானையில் ; அரிசி தேன் நெய்; வெல்லம்
அன்றைக்கு மடிதந்த ஆவின்பால் அவைகூட்டிப்
பாங்குடன் பொங்கியாம் பாருடன் பகிர்ந்துண்ட
பழம் பெரும் திருநாளே தமிழர் தைப்பொங்கலாம்!

'நாங்களோர் இனம்! நமக்குமோர் வாழ்வுண்டு!
நாவிலும் பாவிலும் நடமிடும் மொழியுண்டு!
தீங்கு நினைத்திடாத்  தெளிந்த உறவுண்டு!
தேர்ந்து அறம் செய்யும் திடமான பண்புண்டு!
தாங்கிய வீரமும் தடம் காணா வரலாறும்
தலைதாழ்த்தி விருந்தோம்பி யணைக்கின்ற அகவாழ்வும்;
நீங்காத அன்பினை நெறியாக்கும் இலக்கியமும்
நாம்காண வைத்த நல்லகுடி மரபுண்டு!'

என்றதொரு செய்தியினை எழுச்சியுடன் உலகுக்கு
எடுத்துரைக்க வென்றே இனியதை மகள் வந்தாள்!

ஆழிசூழுலகின் தேசங்கள் பலவும்
அறிந்தனர் தமிழர் விழுமிய மரபினை!
கூழையும் பகிர்ந்து குடித்திடும் பண்பைக்
குவலயம் இன்று கூடிக் கொண்டாடிற்று!
யாவரும் சமமெனும் சத்திய நெறியினைத்
தூவிய செம்மொழி தமிழெனக் கண்டனர்!

வான்புகழ் கொண்டு வையத்தில் ஒலிக்கும்
தேன்தமிழ்த் தாயின் திருவடி போற்றியே
யான் கரங்கூப்பி வாழ்த்துகள் நல்கினேன்!

அன்பால் இனங்கள் இணைந்திடும்போதே
அகிலம் அழிவின் பிடியினை விலகும்!
இன்பம் பொங்கி இருளது விலகி
எல்லா நாளும் பொங்கலாய் விடியும்!
போரெனும் கொடிய பேயது அடங்கி
ஏரதன் பெருமை பாரினைத் தழுவுமே!

அன்பே தமிழ்! அதிலே அமிழ்!

திங்களும் கதிரும் தென்றலும் தீயும்
பொங்கு கடலும் பூமியும் உளவரை
எங்கள் தமிழும் இனமும் நிலைக்குமே!

**புலவர் சிவநாதன்**



# “ரீச்சர் இன்றைக்கு நான் சாப்பிடல. வீட்டை சமைக்க ஒன்றும் இல்லை. அதனால் அப்படியே வந்து விட்டேன்..!”

## முல்லை மாவட்டத்தில் பசியில் வாடும் மாணவர்களின் சோகக் குரல்...

**யு**த்தம் முடிவடைந்து 10 வருடங்கள் கடந்த நிலையில் கூட வடக்கின் அவல நிலை இன்றும் தொடர்கிறது. அதிலும் யுத்தகாலத்தை விட மிகவும் மோசமாக வடக்கின் சில பகுதிகள் தற்போதும் இருக்கின்றது. குறிப்பாக வடக்கில் மீள்குடியேற்றம், வீட்டுத்திட்டம், தொழில் வாய்ப்பு, அடிப்படை வசதிகள் என பல்வேறு பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து வரும் மக்கள் இன்றும் இருக்கிறார்கள்.

இத்தகைய பாதிப்புக்களை வெகுவாக எதிர் நோக்கியுள்ள இறுதிப் போரின் சாட்சிய மாகவுள்ள மாவட்டம் வன்னிப் பிரதேச முல்லைத்தீவு மாவட்டமே. இங்கு நாளாந்தம் ஒரு வயிறு சோற்றுக்காக போராடும் நிலையில் பல குடும்பங்கள் இன்றும் வாழ்கிறன. அதற்கு சான்றாக முல்லைத்தீவு மாவட்டத்தின் சில பாட சாலைகளில் இடம் பெறும் காலை ஒன்று கூடல் பதிவுகள் சாட்சியங்களாகின்றன.



கடல் வளமும், வயல் வளமும், தென்னை-பனை வளமும் கொண்ட முல்லைத்தீவு மாவட்ட மக்கள், யுத்தம் இடம் பெற்ற காலத்தில் கூட கடற் படையின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் கரையோர மீன்பிடியில் ஈடுபட்டு வாழ்வை வளமாக நடத்தியவர்கள். அங்குள்ள விவசாய குடும்பங்கள் கூட உரப்பாவனை தடை, கிருமிநாசினி தடை என அரசின் வன்னிக்கான பொருளாதார கட்டுப் பாடுகளுக்கு மத்தியிலும் விவசாயம் செய்து தமது சீவியத்தை மேற் கொண்டவர்கள். ஆனால் யுத்தம் முடிவடைந்து ஆண்டுகள் பல கடந்து அபிவிருத்தி என சொல்லுகின்ற வேளையில் அந்த மாவட்டத்தில் ஒரு வயிறு சோற்றை பெற முடியாத நிலை சில வீடுகளில் ஏற்பட்டுள்ளது.

முல்லைத்தீவின் கொக்கிளாய், தண்ணீ ருற்று, செம்மலை, அளம்பில், வலைஞர்மடம், தேவிபுரம், நெத்தலியாறு உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மாணவர்கள் கல்விகற்கும் பாடசாலைகளில் தினமும் காலைப் பிரார்த்தனையின் போது 4 தொடக்கம் 5 மாணவ, மாணவிகள் மயக்கமடைந்து விழுகிறார்கள்.

அவர்களை தூக்கிச் சென்று மேசை ஒன்றில் அமர்த்தி தண்ணீர் தெளித்து காற்று விசுக்கும் போது மயக்கம் தெளிந்து அந்த மாணவர்கள் சோர்வுடன் எழும்புகிறார்கள். அவர்களிடம் மயக்கத்திற்கான காரணத்தை வினவும் போது ஒவ்வொரு குடும்பத்தின் பின்னும் உள்ள அந்த சோகம் நிறைந்த அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகின்றது.

“ரீச்சர் இன்றைக்கு நான் சாப்பிடல. வீட்டை சமைக்க ஒன்றும் இல்லை. அதனால் அப்படியே வந்து விட்டேன்..!” என அந்த மாணவர்கள் கூறுகின்ற பதில்கள் அந்த ஆசிரியர்களையே ஒரு கணம் கண்கலங்க வைத்துள்ளது. ஒரு காலைப் பொழுது மட்டுமல்ல சில மாணவர்கள் முதல் நாள் இரவு கூட சாப்பிடாமல் இருந்து விட்டும் பாடசாலை செல்கிறார்கள். அவ்வாறு செல்கிறது அவர்களின் வயிற்றுப் பிழைப்புக்கான போராட்டம். ஆசிரியர்கள் பாடசாலைகளில் தம்மால் முடிந்ததை அந்த மாணவர்களுக்கு வாங்கிக் கொடுத்து விட்டு வகுப்புறைக்குச் அழைத்துச் செல்லும் சம்பவங்கள் கூட நடந்து வருகின்றன. அப்படியான மோசமான நிலையில்

**கோ. ரூபகாந்**

முல்லைத்தீவின் சிலபகுதிகள் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளது. நாளாந்த குடும்ப சீவியத்தை மேற்கொள்ள முடியாத நிலையில் இங்கு பல குடும்பங்கள் வாழ்கின்ற போது அரசாங்கம் கூறும் அபிவிருத்தி எங்கு செல்கிறது...? அரசாங்கத்தின் வாழ்வாதார உதவிகள் யாருக்கு வழங்கப்படுகிறது..? என பல வினாக்கள் இங்கு எழவே செய்கின்றன. வீதிகள் போடுவதும், கட்டடங்கள் கட்டுவதும் தான் அபிவிருத்தி என்றால் மக்கள் அற்ற ஒரு மாயானத்தையே நாம் காண வேண்டிவரும்.

இப் பகுதியில் வாழும் குடும்பங்கள் பல இன்று ஒரு நாள் சீவியத்திற்கு கூட கடற் தொழிலை செய்ய முடியாத நிலையில் உள்ளன. காரணம் இந்திய மீனவர்களின் ஊடுருவல், தென் பகுதி மீனவர்களின் வருகை என நவீன இயந்திர படகுகளின் துணையுடன் முல்லைத்தீவுக்குள் பிரவேசித்து அங்குள்ள மீன்வளத்தை சூறையாடி விட்டுச் செல்கின்றனர். இதனால் இப்பகுதி மீனவர்கள் மீன்வளத்தை பெற முடியாது தவிர்கின்றனர். மீள்குடியேறி மெல்ல மெல்ல தமது வாழ்வை கட்டியெழுப்பும் இவர்கள், போதிய மீன் படாமையால் வருமானம் இன்றி சீவியத்தை போக்க முடியாது அல்லல்படுகிறார்கள்.



சில பகுதிகளில் சீவல் தொழில் செய்யும் மக்களும் வாழ்கின்றார்கள். தற்போது மதுபானசாலைகளின் வருகை காரணமாக கள் வாங்குபவர்களின் எண்ணிக்கை குறைந்து விட்டது என்பது ஒருபுறமிருக்க, அதைவிட மிகவும் முக்கியமான பிரச்சனை போரின் காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தின் பல ஆயிரக்கணக்கான தென்னை, பனை மரங்கள் அழிக்கப்பட்டு விட்டது. இதனால் சீவல் தொழில் செய்யும் மக்கள் பலரும் தமது பரம்பரைத் தொழிலை இழந்து வருமானத்தைப் பெற முடியாது போராடும் நிலையில் இருக்கிறார்கள். போரின் போது பயன்படுத்தப்பட்ட குண்டுகளின் நச்சுப் பதார்தங்கள் கூட அப்பகுதியில் விவசாய நடவடிக்கையின் விளைச்சலைக் கட்டுப்படுத்தியே வருகிறது. இதனால் விவசா யத்தில் கூட போதிய விளைச்சல் இன்றி மக்கள் இன்றும் பல்வேறு வாழ்வாதார சிக்கல்களை எதிர்நோக்கியே வருகிறார்கள்.



இது தவிர, போரின் கோரத் தாண்டவத்தால் பெற்றோரை இழந்து பிறரின் அரவணைப்பில் வளரும் மாணவர்கள், குடும்பத் தலைவனை இழந்து வாழும் பெண் தலைமைத்துவ குடும் பங்களில் உள்ள மாணவர்கள் ஆகியோரின் நிலை மிகவும் மோசமாகவே உள்ளது. ஆண்கள் இருந்தும் தொழில் செய்ய முடியாத நிலை ஒரு புறம் இருக்க, பெண் தலைமைத்துவ குடும்பங்கள் தொழில் இன்றியே வாழும் பரிதாப நிலை தொடர்கிறது. அவர்களுக்கான வாழ்வாதார கட்டமைப்புக்கள் எவையும் இதுவரை ஒழுக்காக அரசாங்கமும் சரி, மாகாணசபையும் சரி செய்யவில்லை. இதனால் நாளாந்த வயிற்றுப் பசியைக் கூட இந்தக் குடும்பங்கள் போக்க முடியாது திணறுகின்றது. வறுமைக்கு மத்தியிலும் படித்து சாதித்து விட வேண்டும் என நினைக்கும் மாணவர்கள் கடும் பசியுடன் பாடசாலை செல்கிறார்கள்.

‘பசி வந்தால் பத்தும் பறந்திடும்” என் பார்கள். அதுபோலவே மாணவர்கள் பசிக்கு மத்தியில் சென்று காலைப் பிரார்த்தனையில் பங்கேற்கின்ற போது பல மாணவர்கள் மயங்குகிறார்கள்.

தொடரும் இந்த அவல நிலைக்கு முடிவுதான் என்ன..? இந்த மாணவர்கள், குடும்பங்களின் வாழ்வில் மீண்டும் விருத்தியை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு யாருடையது...? என பல விடை தெரியாத வினாக்களுடன் இருக்கும் முல்லைத்தீவுக்கு விடிவுதான் எப்போது...?

••••

# மாகாண சபை முறைக்கும் ஆப்பு?

# கோத்தா வகுக்கும் ரகசிய திட்டம்




சிறிலங்காவில் ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்து பொதுத் தேர்தலை நோக்கி நாடு சென்று கொண்டிருக்கும் நிலையில், முக்கியமான ஒரு விடயம் மக்களின் கவனத்திலிருந்து தப்பிப் போயிருக்கின்றது. அதுதான் மாகாண சபைகளுக்கான தேர்தல். மாகாண சபைகள் கலைக்கப்பட்டு பல மாதங்களாகி விட்டன. சில மாகாண சபைகள் சில வருடங்களுக்கு முன்னரே கலைக்கப்பட்டு விட்டன. ஒன்பது மாகாணங்களிலும் இப்போது ஆளுநர் ஆட்சிதான். மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படாமலிருப்பதன் பின்னணியில் இரகசியத் திட்டம் ஒன்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுவதில் உண்மை இருக்கின்றதா? அது குறித்து இந்த வாரம் பார்ப்போம்.

ஜனாதிபதி தேர்தலின் இறுதி முடிவுகள் தேர்தல் செயலகத்தில் வைத்து உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட பின்னர், அங்கு உரையாற்றிய தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய முக்கியமான ஒரு கோரிக்கையை புதிய ஜனாதிபதியாகத் தெரிவாகிய கோத்தபாய ராஜபக்ஷவிடம் முன்வைத்தார். "மாகாண சபைகளுக்கான தேர்தல் பல மாத காலமாக நடத்தப்படாமலிருக்கின்றது. அதனை உடனடியாக நடத்துங்கள்" என்பதுதான் அந்த கோரிக்கை. வழமைபோலவே கொடுப்புக்குள் சிரித்தவாறே இதனைச் செவிமடுத்த கோத்தபாய ராஜபக்ஷ, இவ்விடயத்தில் என்ன செய்யப் போகின்றார் என்பது இன்றுவரை மர்மமாகத்தான் இருக்கிறது.

பொதுத் தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் மாத பிற்பகுதியில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பாராளுமன்றத்தின் பதவிக் காலம் ஆகஸ்ட் மாதத்தில்தான் முடிவுக்கு வருகின்றது. இருந்த போதிலும் அதனை கலைப்பதற்கான அதிகாரம் மார்ச் மாதத்தில் ஜனாதிபதியின் கைகளுக்கு வருகின்றது. அந்த அதிகாரம் தன்னுடைய கைகளுக்கு வந்ததும் உடனடியாகவே பாராளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலுக்கான உத்தரவை வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதில் மூன்றில் இரண்டைப் பெறுவதுதான் அவரது எதிர்பார்ப்பு.

பொதுத் தேர்தல் 6 மாதங்கள் முன்னதாகவே நடைபெறப் போகின்றது. ஆனால் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் எப்போது நடைபெறும் என்பது தெளிவற்றதாக இருக்கின்றது. ஒன்பது மாகாண சபைகளும் கலைக்கப்பட்டு இப்போது அந்த மாகாணங்களில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆளுநரின் ஆட்சியே நடைபெறுகின்றது. பொதுத் தேர்தலுக்குப் பின்னரே மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெறும் என்பது பொதுவான எதிர்பார்ப்பாக இருக்கின்றது. ஆனால், அதில் இப்போது ஒரு சிக்கல் இருப்பதாகவும், சிங்களத் தேசியவாதிகள் இரகசியத் திட்டம் ஒன்றுடன் செயற்படுவதாகவும் தமிழ்க் கட்சித் தலைவர் ஒருவர் சொல்கிறார்.

கோதாபய ராஜபக்ஷவை பொறுத்தவரையில் அதிகாரப் பரவலாக்கல் மற்றும் 13வது திருத்தச்சட்டம் குறித்து தன்னுடைய நிலைப்பாடு இதுதான் என்பதை அவர் தெளிவாக கூறிவிட்டார். அதிகாரப் பரவலாக்கலை வழங்கப் போவதில்லை என்பதும், 13 ஆவது திருத்தத்தில் இருக்கக்கூடிய பொலிஸ் காணி அதிகாரங்கள் எந்த சந்தர்ப்பத்திலும் வழங்கப்படாது என்பதுதான் அவருடைய நிலைப்பாடு. மாகாணசபை முறை நாட்டுக்கு அவசியம் இல்லை என்பது கூட அவரது நிலைப்பாடாக தெரிவிக்கப்பட்டாலும் கூட அதனை அவர் பகிரங்கமாக அறிவிக்கவில்லை. பகிரங்கமாகச் சொல்வது இந்தியாவைச் சீண்டுவதாக இருக்கும் என்பதால், இரகசியமாக சிலவற்றைச் செய்வதற்கு அவர்கள் முற்படுகின்றார்கள்.


அதிகாரப் பரவலாக்கலையோ மாகாண சபைகளை உருவாக்குவதற்கு அடிப்படையாக இருந்த 13ஆவது திருத்தத்தையோ ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்றால், மாகாணசபை முறையை கோத்தபய ராஜபக்ஷ எவ்வாறு ஏற்றுக்கொள்வார் என்பது ஒரு முக்கியமான பிரச்சனை.

**கொழும்பிலிருந்து அகிலன்**

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் நிலைப்பாடும் பெருமளவுக்கு இதனை ஒத்ததாகவே இருக்கின்றது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கு அளித்துள்ள பதிலில் இது தொடர்பு தன்னுடைய நிலைப்பாட்டை மகிந்த ராஜபக்ஷ வெளிப்படுத்தியிருக்கிறார். பொதுத் தேர்தலின் பின்னரே தீர்வுக்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் என்பதையும், அந்த முயற்சிகள் கூட சிங்கள மக்களின் விருப்பத்திற்கு ஏற்றதாக இருக்கும் என்பதையும் மஹிந்த ராஜபக்ஷ உறுதியாக தெரிவித்திருக்கின்றார்.



மாகாண சபைகளை பொறுத்தவரையில் அதன் தேர்தல் முறையில் மாற்றத்தை செய்வதற்கான தீர்மானம் ஒன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அது கலப்புத் தேர்தல் முறையாக இருந்தமையால், அதற்காக எல்லை நிர்ணய குழு ஒன்றும் அமைக்கப்பட்டு அதனுடைய அறிக்கை ஒன்றும் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அறிக்கை பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டது. ஆனால் இறுதியில் தேர்தல் முறையில் மாற்றம் செய்வதில்லை என்ற கருத்தை அரசியல் கட்சிகள் அனைத்தும் ஏற்றுக் கொண்டிருக்கின்றன. தற்போது இருப்பதைப் போல விகிதாசார பிரதிநிதித்துவ முறைப்படியே தேர்தல் நடைபெறும் என்பதுதான் அவர்களுடைய நிலைப்பாடு. ஆனால், பாராளுமன்றத்தில் இதற்கான தீர்மானம் ஒன்று கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்படவேண்டும்.




மாகாணசபைகளுக்கான தேர்தலுக்குச் செல்வதற்கான நிலையில்அப்போது ரணில்விக்கிரமசிங்க இருக்கவில்லை. வடக்கில் விக்கினேஸ்வரனும் பலமான நிலையில் இருந்தார். அதனால், மாகாண சபைத் தேர்தலுக்குச் செல்வதை கூட்டமைப்பும் விரும்பவில்லை. அதற்கான தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டும் என்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையும் அக்கறை காட்டவில்லை. இப்போது மாகாண சபைகள் இல்லாத நிலை தொடர்கின்றது. அதாவது, தமிழ் மக்களுக்கு இருக்கக்கூடிய குறைந்தபட்ச அதிகாரப் பரவலாக்கலுக்கான பொறிமுறையும் காணாமல் போய்விட்டது.

இதிலுள்ள ஆபத்தை சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். இரண்டு விடயங்கள் இதில் கவனத்திற்கொள்ள வேண்டியவையாக உள்ளன. ஜனாதிபதி கோத்தாபய பாராளுமன்றத்தில் கடந்த வாரம் நிகழ்த்திய உரையில் முக்கிய மாக ஒரு விடயத்தைக் குறிப்பிட்டார். "நான் என்னுடைய பதவிக்காலத்தில் ஒற்றை யாட்சியைப் பாதுகாப்பேன் எனவும். பௌத்த மதத்தைப் பாதுகாப்பேன் எனவும் உறுதியளிக்கிறேன்" என அழுத்தியுரைத்திருந்தார். இவை இரண்டும் ஏற்கனவே உள்ளவை. இதில் பாதுகாக்க என்ன உள்ளது?

ஒற்றையாட்சி என்பது அரசியலமைப்பிலும் சொல்லப்பட்டிருக்கின்றது. தற்போதுள்ள நிலைமையில் ஒற்றையாட்சியை சற்று கேள்விக்குள்ளாக்கக் கூடிய வகையில் இருப்பது மாகாண சபைகள்தான். ஆக, "ஒற்றையாட்சியை பாதுகாப்பேன்" என திரும்பத் திரும்ப கோத்தா சொல்லிக்கொள்வதன் உள்ளார்த்தம் மாகாண சபைகளை இல்லொதொழிப்பதாகவும்

தொடர்ச்சி 13ம் பக்கம்

# விடுதலை உணர்வை எமது இளைஞர்களிடம் விதைக்கவில்லையெனில்

## அது தமிழ் சமூகத்திற்கு நாம் செய்யும் துரோகம்



**முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன்**

**விடுதலை உணர்வை எமது இளைஞர்களிடம் விதைத்து தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு கிடைக்கும் வரையில் நாங்கள் உறுதியாக இருக்க வேண்டும் என்ற விடயத்தினை நாங்கள் கூறாமல் விடுவோமாகவிருந்தால், அது தமிழ் சமூகத்திற்கு நாங்கள் செய்யும் துரோகமாகவே இருக்கும் என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார். இலக்கு வாராந்த இதழுக்கு வழங்கிய நேர்காணலியேயே அவர் இதனை தெரிவித்தார்.**

**அவர் வழங்கியநேர்காணலின் முழு வடிவம் வருமாறு:**

**கேள்வி:**

**தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மீது தமிழ் மக்களின்பல்வேறு பிரச்சினைகள் குறித்து கரிசனை கொள்ளவில்லையென்ற குற்றச்சாட்டுகள் உட்பட பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. இது தொடர்பில் உங்களின் கருத்து என்ன?**

**பதில்:**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்த வரை அவர்கள் தொடர்பாக தொடர்ச்சியாக பல்வேறுபட்ட விமர்சனங்கள் எல்லோராலும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. 2009ஆம் ஆண்டு மே மாதம்18ஆம் திகதியிலிருந்து இன்று வரையான பத்து வருட காலப் பகுதியில் தான் இவ்வாறான விமர்சனங்கள் முன்வைக்கப்படுவதும் அதற்கான பதிலை நாம் வழங்க வேண்டியதுமாக இருந்து வருகின்றது. ஏனென்றால் 2009ஆம் ஆண்டிற்கு முன்னதான காலப் பகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் பணி இருக்கவில்லை.

2010ஆம் ஆண்டு முதல் இன்று வரையான காலப் பகுதியில் பல்வேறுபட்ட பணிகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செய்திருக்கின்றது. திருகோணமலை, வன்னி போன்ற பகுதிகளில் பல்வேறு காணி விடுவிப்புகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முயற்சியின் காரணமாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பது உண்மையாகும். 2010ஆம் ஆண்டு 246ஆக இருந்த அரசியல் கைதிகளின் எண்ணிக்கை தற்போது 94ஆக குறைந்து படிப்படியாக அவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றனர். எனினும் முழுமையாக அவர்கள் விடுதலை செய்யப்படவில்லை என்பது உண்மையாகும். காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி தொடர்பில் பல்வேறு பிரச்சினைகள் இருந்து வருகின்றது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டம் நியாயமானதாக நாங்கள் பார்க்கின்றோம்.

இராணுவத்தாலும், பாதுகாப்புப் பிரிவினராலும் அழைத்துச் செல்லப்பட்ட தங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது என அவர்கள் கேட்கின்ற கேள்விக்கு பதிலை வழங்காமல் அரசாங்கம் இழுத்தடிப்பு செய்து வருகின்றது. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக சர்வதேச ரீதியிலான ஒரு காரியாலயம் அமைத்து அதன் மூலம் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முயற்சியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்திருந்தது. ஏனையவர்களும் அந்த முயற்சிகளை எடுத்திருந்தனர். ஆனால் அந்த முயற்சியை தொடர்ந்து செய்ய முடியாமலிருக்கின்றது.

ஏனென்றால் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அவ்வாறானதொரு காரியாலயத்தை அமைத்து காலத்தை இழுத்தடிக்கத் தேவையில்லை, எங்களுக்கான நீதியை தரவேண்டும், அவர்களை அழைத்து மீள எங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்தக் கேள்விக்கான சரியான பதிலை வழங்கக் கூடியவர்கள் தற்போது அரசாங்கத்தில் இருப்பவர்களாவர். காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களின் போது மகிந்த அவர்கள் ஜனாதிபதியாக பதவி வகித்த போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்தவர் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச ஆவார். அவர் தற்போது ஜனாதிபதியாக இருக்கின்றார். ஆகவே அவர் இதற்கான பொறுப்பை ஏற்று பதிலை கொடுக்க வேண்டும்.

**கேள்வி:**

**தமிழ் அரசியல் கைதிகளின் விடயத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லையென்ற ஆதங்கம் மக்களிடம் உண்டு. இது தொடர்பில் உங்கள் கருத்த என்ன?**

**பதில்:**

தமிழ் தேசிய கூட்டமைப்பு இது தொடர்பில் காத்திரமான நடவடிக்கையினை எடுத்தது. ஆனால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவோ அன்றைய அரசாங்கமோ அதனை கவனத்தில் கொள்ளவில்லையென்பதே உண்மை. அரசியல் கைதிகள் விடயத்தில் இரண்டு மூன்று விடயங்கள் உள்ளன. தீர்ப்பளிக்கப்பட்ட அரசியல் கைதிகள், சந்தேகத்தின் பேரில் விசாரணைகளில் இருக்கின்ற அரசியல் கைதிகள் என்று உள்ளன. இதில் அரசியல் கைதியான செல்வகுமார் மகேந்திரன் என்னும் அரசியல் கைதியினை விடுதலை செய்ய வேண்டிய தார்மீக பொறுப்பு ஜனாதிபதிக்கு இருந்தது. ஆனாலும் அவர் அதனை செய்யவில்லை. தமிழ் தேசிய கூட்டமைப்பு அதற்கான தொடர்ச்சியான அழுத்தங்களை வழங்கி வந்தது. 244 அரசியல் கைதிகள் இருந்தார்கள். இன்று 94 ஆக மாற்றம் பெற்றுள்ளது. அதற்கான கணிசமான பங்களிப்பினை தமிழ் தேசியகூட்டமைப்பு படிப்படியாக செய்து வந்தது.

இலங்கையினை பொறுத்தவரையில் ஆட்சியதிகாரத்திற்கு வரும் ஜனாதிபதிகளின் மனோநிலையென்பது தொடர்ச்சியாக இனவாத நிலையினைக் கொண்டதாகவே இருந்து வருகின்றது. ஆயுதம் ஏந்தி ஒரு இனத்திற்காக போராடியவர்களை பயங்கரவாதிகளாக சித்திரிக்கப்படுவதனால் அவர்களை விடுதலை செய்வதனால் தமது வாக்கு வங்கி குறைந்து விடுமோ என்ற மனோநிலையினை கொண்டிருப்பதனால் அவர்களை விடுதலை செய்வதில் பின்னடிப்புகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**கேள்வி:**

**தமிழ் அரசியல் கைதி மகேந்திரனின் மரணத்திற்கு பின்னராவது தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக தமிழ் கட்சிகளிடம் ஏதாவது திட்டங்கள் இருக்கின்றதா?**

**பதில்:**

சிறைச்சாலையில் உயிரிழந்த இறுதி மரணமாக மகேந்திரனின் மரணத்தினை நாங்கள் பார்க்கின்றோம். ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் அடிப்படையில் தண்டனை வழங்கப்பட்ட அரசியல் கைதிகளை விடுவிக்க முடியும். ஏனைய சந்தேக நபர்களாகவுள்ளவர்களின் வழக்குகளை துரிதப்படுத்தி விடுவிக்க முடியும். அதற்கான நடவடிக்கைகளையும் தமிழரசுக் கட்சியில் இருக்கக் கூடிய சட்டத்தரணிகள் முன்னெடுத்து வருகின்றனர். பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சுமந்திரன் சட்டமா அதிபர் திணைக்களம் ஊடாக பல நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்தார். மகேந்திரனின் இறப்புக்கு பின்னரும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் இன்றைய அரசாங்கத்துடன் பேசுவதற்கான முயற்சிகளை தமிழ் தேசிய கூட்டமைப்பு முன்னெடுத்து வருகின்றது. அதனை ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஸ எந்தளவுக்கு ஏற்றுக் கொள்வார் என்பதை நாங்கள் பொறுத்திருந்தான் பார்க்க வேண்டும்.





**கேள்வி:**

**கிழக்கு மாகாணத்தில் காவல் நிலையம் தாக்கப்பட்டு காவல் துறையினர் கொல்லப்பட்ட சந்தேகத்தின்பேரில்கைது செய்யப்பட்டுதண்டனை வழங்கப்பட்டவரே இன்று மரணமடைந்த அரசியல் கைதி மகேந்திரனாகும். ஆனால் அந்த காவல் நிலையங்கள் மீதான தாக்குதல்களை வழிநடாத்தியதாக கருதப்படும் கருணா போன்றவர்கள் இன்று சுதந்திரமாக இருக்கின்றனர். இவ்வாறான நிலையில் தமிழ் அரசியல் கைதிகளின் உண்மை நிலைகள் தென்னிலங்கையில் உள்ள மக்களிடமும் அரசியல் தலைவர்களிடமும் ஏன் கொண்டு செல்லப்படவில்லை.?**

**பதில்:**

விடுதலைப்புலிகளின் தளபதியாக இருந்த விநாயகமூர்த்தி முரளிதரனின் காலத்தில் தான் அன்று கிழக்கில் 600 சிறீலங்கா காவல் துறையினர் கடத்தப்பட்டனர். அக்காலத்தில் மகேந்திரன் இருந்தாராஇல்லையாஅல்லதுதிட்டமிடப்பட்டுஅவர் கைது செய்யப்பட்டரா என்ற கேள்வியுள்ளது. நாங்கள் அறிந்த வரையில் அவர் சுற்றிவளைப்பு ஒன்றில் கைது செய்யப்பட்டு பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தீர்ப்பு

தொடர்ச்சி 13ம் பக்கம்




# “சேவை செய்வதுதான் உண்மையான இன்பம் உண்மையான இன்பத்தை உணரக் கற்றுக்கொள்”

## மாவீரர் கேணல் கிட்டு அவர்களின் அனுபவ மொழி

தேசியத் தலைவரின் வீரத் தளபதியான மாவீர் கேணல் கிட்டு என்ற தமிழீழ விடுதலை வரலாற்று மனிதனைக் காலத்தில் தோற்றுவித்ததும் காலத்துள் ஒடுக்கியதுமான மாதம் தைமாதம். இதனால் தை பிறந்தால் தாயகப் பற்றுடைய ஈழத்தமிழர் நெஞ்சங்களில் கேணல் கிட்டு என்னும் தன்னலமில்லா அன்புருவின் நினைவலைகளின் ஆட்சி தங்களை அறியாமலே எழுவது இயல்பு.

“சேவை செய்வதுதான் உண்மையான இன்பம். உண்மையான இன்பத்தை உணரக் கற்றுக் கொள்” என்று தன்வாழ்வால் தமிழரை அழைத்த இவர் போன்ற மனிதர்களின் வரலாற்று உண்மைகள், ஈழமக்களின் இளைய சமுதாயத்திற்குப் பாரப்படுத்தப்பட்டாலே இன்று மட்டுமல்ல என்றும் ஈழமக்களின் தாயகம், தேசியம், தன்னாட்சி என்பது அவர்களிடம் இருந்து யாராலும் எக்காலத்திலும் பிரிக்க முடியாத அவர்களின் பிறப்புரிமையான தன்னாட்சியுரிமை, அதற்குரிய நிலையில் நிலைத்து நிற்கும். கேணல் கிட்டு அவர்களின் இலக்குகளை எல்லாம் இலக்கின் இச்சிறு சிந்தனை வழியாக மதிப்பிடல் இயலாத விடயமாயினும், புலத்து வாழ்வில் அவர் வாழ்ந்த காலத்தில் அவர் தந்து சென்ற எண்ணங்களில் மிகச்சிலவற்றையாவது முன்நிறுத்தி இக்காலத்திற்கு அச்சிந்தனைகள் தரும் உந்துதல்களை பதிவாக்குவதே நோக்காக அமைகிறது.



முதலில் 2020 புத்தாண்டைத் தொடங்கும் இந்த ஆரம்ப காலத்தில் கேணல் கிட்டு அவர்கள் 01.01.1992 புத்தாண்டுக்குத் தெரிவித்த வாழ்த்துடன் தொடங்கலாமென்று எண்ணுகிறேன். “வாழ்க. வாழ்க. நலமுடன் வாழ்க. அதை விட அறிவுடன் வாழ்க. அதை விட நற்பெயருடன் வாழ்க. அதைவிட மற்றவர்களுக்காக வாழ்க. அதைவிட மக்கள் சேவை செய்க. அதை விட நல்லதையே நினைக்க. மேலும் நல்லதே செய்க......வாழ்க, வாழ்கவென வாழ்த்துகிறேன்.” கேணல் கிட்டு அவர்களின் இந்த வாழ்த்தொலி இன்றும் மக்கள் சேவையின் உன்னதத்தை எடுத்துரைக்கிறது. “சிந்தனையும் தேடலுமே ஒருவனை உயர்த்த முடியும். ஆனால் எப்போதும் மனித சிந்தனை மற்றவர்களுக்காகவும் மனித இனத்தை முன்னேற்றுவதற்காகவுமே இருக்க வேண்டும். அதை விடுத்து தமது விற்பன்னத்தைக் காட்டவும், மற்றவர்களை விமர்சிக்கவும் மட்டும் இருக்க கூடாது” என்பது கேணல் கிட்டு அவர்களின் உறுதியான மொழியாக புலத்தில் அமைந்திருந்தது. இன்றும் இவ் அறிவுரை தமிழர்களுக்குக் காலத்தின் தேவையாகிறது.

“நாம் எமது மக்களுக்கு அமைதியையும் சுபீட்சத்தையும் கொடுக்கவேண்டும் என்பதற்காகத்தான் போராடிக் கொண்டிருக்கிறோம். எமது எதிரியோ எமது தேவையை எமது கோரிக்கையை ஏற்பதாக இல்லை. தான் கொடுக்கும் சலுகைகளை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கின்றானே ஒழிய



எமது உரிமையைக் கொடுக்கத் தயாராக இல்லை. நாம் பேராசை பிடித்தவர்களோ உலகின் நடைமுறை தெரியாதவர்களோ அல்ல. நாம் கேட்கின்ற அடிப்படை உரிமை, எமது மண்ணிலே எமது மக்கள் உயிர் வாழ்வதற்கான உரிமைதான். அதைவிடுத்து மாகாண சபையாலோ அல்லது அதைவிடக் கூடிய அதிகாரங்களைக் கொண்ட சபையாலோ எமது பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாது. எமது மக்களின் பாதுகாப்பைப் பூரணமாக உறுதிப்படுத்தும் வடிவத்தையே நாம் தேடிக் கொண்டிருக்கிறோம்”.

மேலும், தமிழர்களின் ஆயுதப் போராட்டம் என்பது தமிழர்கள் அவர்களது பாதுகாப்பு வடிவத்தை உருவாக்கிய வரலாற்று நிகழ்வு என்பதில் கேணல் கிட்டு மிகத் தெளிவாக இருந்தார். “எமக்கு ஏ.கே. 47 ஒன்றும் பெரிதல்ல. நாம் எமது ஆயுதங்கள் என்று குறிப்பிடுவது எமது பாதுகாப்பு வடிவத்தையே. தமிழ் மக்களுக்குப் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வேண்டும். சிங்களப் படைகளை நாம் எமது பாதுகாப்புக்கு உத்தரவாதமாக ஏற்க முடியுமா? நாம் ஆயுதங்களில் காதல் கொண்டவர்கள் என்றும், ஆயுதப் போராட்டத்தைத் தவிர வேறு வழி தெரியாதவர்கள் என்றும் சிலர் நினைக்கலாம். ஆனால் நாம் அப்படியல்ல. அரசியலையும் உலகின் நடைமுறைகளையும் நன்கு புரிந்ததனால்தான் நாம் எமது உரிமைகளை வென்றெடுக்கப் போராடித்தானாக வேண்டும் என்று கூறுகின்றோம்,”, இது கேணல் கிட்டு அவர்களின் அன்றைய கூற்று.



இன்று ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட சூழலில் பத்தாண்டைத் தாண்டிவிட்ட நிலையில்,

பற்றிமாகரன்

ஆயுதம் ஈழத்தமிழ் மக்களின் பாதுகாப்புக்கான கருவி என்ற நிலை மாறுபட்டுள்ள சூழலில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களும் தமிழினப் பற்றுள்ள உலகத் தமிழர்களுமே ஈழத்தமிழர்களின் பாதுகாப்புக்கான உத்தரவாதமாக மாறியுள்ளனர். இந்த நடைமுறை எதார்த்தத்தை எத்தனை புலம்பெயர் தமிழர்களும் உலகத் தமிழர்களும் உணர்ந்து ஈழத்தமிழர்களின் பாதுகாப்பைத் தமது வாழ்வின் முக்கிய இலக்குகளில் ஒன்றாக முன்னிறுத்தி வாழ்கின்றார்களோ அந்த அளவுக்கே ஈழத்தமிழர்களின் பாதுகாப்புப் பலம் பெறும். இந்த ஒற்றுமை பலம் பெற சாதியுணர்வின் பொய்மைகளை உணர்த்தி, தொண்டு உணர்வின் முக்கியத்துவத்தை வளர்த்து, எங்கள் பெண்களுக்கான உரிமைகளும் போற்றப்பட வேண்டு மென்பது அவர் பெருவிருப்பாகப் புலத்தில் இருந்தது.

“மேற்குலக நாடுகளிலே பலமாற்றங்களும் அந்த மாற்றங்களை ஏற்றுக்கொள்ளும் வகையில் விழிப்புணர்வும் ஏற்பட்டிருக்கின்றது. ஆனால் இந்த மாற்றங்கள் ஆசியாவில் இன்னும் ஏற்படவில்லை. ஆனால் அதற்காக நாம் மனஞ்சோர்ந்து விடலாகாது. தொடர்ந்து போராட வேண்டும். அப்போதுதான் எமது உரிமையைப் பெற்றுக் கொள்ள முடியும்” என்பது கேணல் கிட்டுவின் அனுபவ மொழி; ஆனால் தன்னாட்சி உரிமை ஈழத்தமிழ் மக்களின்

> “நாடிருந்தும்
> நாடோடியாக
> நாளெல்லாம்
> நாடெல்லாம்
> ஓடுகின்றேன்
> ஓடுவதற்கு உடல்வலு தேவையில்லை
> மனவலு இருந்தால் மட்டும் போதும்
> ஓடுவதற்கு கால் எனக்குத் தேவையில்லை
> போதிய உளஉரம் வேண்டும்
> ஓடுவதால் மீண்டும் மீண்டும் உறுதி
> பெறுகின்றேன்
> நாம் ஓடாமல் இருப்பதற்கு
> ஓர் சுதந்திர நிலம் அமைக்க
> வேண்டுமென்று!
> இது கவிதையல்ல – என் எண்ணங்கள்”

பிறப்புரிமை என்பதைக் கூட ஏற்காதவர்களாகச் சிங்களத் தலைமைகளும் தமிழ்த் தலைமைகளும் செயற்படுவதே ஈழத்தமிழ் மக்களின் அடிப்படை மனித உரிமைகள் வன்முறைப்படுத்தப்படுவதற்கும், அவர்கள் மேலான இனஅழிப்புக்கள் தொடர்வதற்கும் காரணமாகிறது.

கேணல் கிட்டு அவர்கள் ஈழத் ‘தமிழர்களின் தேசியப் பிரச்சினை’ (*Tamils National Question*) என்பதற்கு “நாம் ஒரு தேசிய இனம். எமது தலைவிதியை நிர்ணயிக்கும் உரிமை எமக்கு

தொடர்ச்சி 9ம் பக்கம்

# வவுனியா வடக்கு மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்த அரசியல் கட்சிகள் உதவ வேண்டும்



வவுனியா வடக்கு பிரதேசசபை உறுப்பினர் **விநாயகமூர்த்தி சஞ்சுதன்**

**வ**வுனியா வடக்கு பிரதேச சபையால் செய்யப்பட வேண்டிய வேலைகளில் 95 சதவீதமான வேலைகள் நடைபெறவில்லை. 2019ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டமும் பலனளிக்கவில்லை. அதனால் இரண்டு தடவைகள் வரவு செலவுத் திட்டத்தை நாங்கள் தோற்கடித்துள்ளோம். பிரதேச சபையால் செய்து தரக்கூடிய வேலைகளைக்கூட செய்து தருவதில்லை என மக்கள் எம்மிடம் கேள்வி கேட்கின்றனர் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியின் வவுனியா வடக்கு பிரதேச சபை உறுப்பினர் விநாயகமூர்த்தி சஞ்சுதன் தங்கள் பிரதேச சபை அபிவிருத்தி தொடர்பாக இலக்கு ஊடகத்திற்கு வழங்கிய கருத்தில்தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

யுத்தம் நிறைவடைந்து 10 ஆண்டுகள் ஆகியும் எங்கள் பிரதேச எல்லைக் கிராமங்களில் வீட்டுத் திட்டங்கள் இன்னும் வழங்கப்படவில்லை. வவுனியா வடக்கு காஞ்சுரமோட்டை என்னுமிடத்தில் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இருந்தும் அங்கு குடிதண்ணீர் பிரச்சினை பெரியளவில் உள்ளது. அத்துடன் போக்குவரத்துப் பிரச்சினையும் உள்ளது. அங்குள்ள மாணவர்கள் பாடசாலைக்காக நெடுங்கேணிக்கு வரவேண்டிய தேவை உள்ளது. பஸ் போக்குவரத்துகள் நடைபெறுவதில்லை. இதனால் மாணவர்கள் கஸ்டங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

யுத்தம் முடிவடைந்து இவ்வளவு காலமாகியும் வீதிகள் புனரமைக்கப்படவில்லை. வவுனியா வடக்கைப் பொறுத்தவரையில் 95 சதவீதமானவை விவசாயக் கிராமங்களே. விவசாயிகள் தங்களின் விவசாய பொருட்களை விற்பனை செய்வதற்கு வீதிகள் புனரமைக்கப்படவில்லை. அரசியல்வாதிகள் தங்கள் சுயநலத்திற்காக தேர்தல் நேரங்களிலேயே வந்து பேசுவார்கள். தேர்தல் முடிய அவர்கள் சென்றுவிடுகின்றார்கள். மீண்டும் தேர்தல் நேரத்திலேயே வருவார்கள்.

குறிப்பாக காஞ்சுரமோட்டை பகுதியில் சென்று பார்த்தால், அங்கு குடிதண்ணீர் இல்லை. போக்குவரத்து வசதிகள் இல்லை. வவுனியா வடக்கிலுள்ள 20 கிராம சேவகர்கள் பிரிவிலும் இதே நிலைமை தான் உள்ளது. 30 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாத வீதிகள் இன்றும் அப்படியே உள்ளன. மக்கள் அத்தியாவசிய தேவைகளுக்குக்கூட செல்ல முடியாது. மாணவர்கள் பாடசாலைகளுக்குக்கூட போக முடியாத சூழ்நிலை உள்ளது.

அரசியல் கட்சிகள் இது போன்ற விடயங்களை பார்ப்பதில்லை. அவர்கள் தங்களின் தேவைகளுக்காகவே இந்த விடயத்தை மேற்கொள்கின்றார்களே தவிர, மக்களின் தேவை கருதி மக்களுக்காக இதனை செய்ய வேண்டுமென எந்த அரசியல் கட்சிகளும் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டதில்லை.

பிரதேச சபையால் செய்யப்பட வேண்டிய வேலைகளில் 95 சதவீதமான வேலைகள் நடைபெறவில்லை. 2019ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டமும் பலனளிக்கவில்லை. அதனால் இரண்டு தடவைகள் வரவு செலவுத் திட்டத்தை நாங்கள் தோற்கடித்துள்ளோம். பிரதேச சபையால் செய்து தரக்கூடிய வேலைகளைக்கூட செய்து தருவதில்லை என மக்கள் எம்மிடம் கேள்வி கேட்கின்றனர். உள்ளக வீதிகள் பிரதேச சபையால் புனரமைக்கப்பட வேண்டியவை. அவற்றைக்கூட இன்று வரை பிரதேச சபை மேற்கொள்ளவில்லை. குறித்த பதவியில் இருந்து நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது என்று அறியும் பட்சத்தில் நாங்கள் அந்தப் பதவியிலிருந்து வெளியேறிவிட வேண்டும். அந்த இடத்திற்கு வேறு ஒருவர் வந்து இந்த வேலைகளை செய்யலாம்.

பொது மக்களுக்கான சந்தைகளைக்கூட அமைத்துத்தர முடியாத நிலைமை உள்ளது. உதாரணமாக 9 கிராமங்கள் அடங்கிய நயினாமடு பிரதேசத்தில் பிரதேசசபைக்கு சொந்தமான காணி உள்ளது. அந்தக் காணியில் ஒரு சந்தை அமைத்துக் கொடுக்கும்படி மனு கொடுத்திருந்தோம். அதைக்கூட செய்து தரவில்லை. அதே போல் கனகராயன்குளம் தெற்கில் ஒரு சந்தை அமைக்கும்படி கோரப்பட்டிருந்தது. ஆனால் அதையும் அவர்கள் மேற்கொள்ளவில்லை. இவ்வாறே இந்த பிரதேச சபைகள் இருந்து வருகின்றன.

4 ஆண்டுகளாக தங்கள் பதவிகளை தக்க வைத்துக் கொண்டு தங்களின் பதவிக் காலம் வரையிலும் பொது மக்களை ஏமாற்றிய பின்னர் வீட்டிற்குச் சென்றால் சரியென்ற நிலையே இருக்கின்றது. இதனால் இரண்டு தடவைகள் வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ளது. மக்களுக்கான தேவைகளில் 75 வீதமான தேவைகளையாவது பூர்த்தி செய்ய வேண்டும்.

ஒவ்வொரு கட்சிகளும் மக்களிடம் சென்று வாக்குக் கேட்கும் பலவேலைத் திட்டங்களை செய்வோம் என்று கூறியே வாக்குக் கேட்பார்கள். ஆனால் அதில் ஒருவீதமாவது அந்த மக்களின் பிரதேசங்களில் செய்வதாக தெரியவில்லை. அதனால் ஒழுங்கான ஒரு சரியான தலைமைக்குக் கீழே நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகவே இந்த 17 உறுப்பினர்களும் ஒன்று சேர்ந்து இந்தவரவு செலவுத் திட்டத்தை தோற்கடித்துள்ளோம்.

எங்கள் மக்கள் இந்த விவசாயத்தையே நம்பியிருக்கின்றார்கள். அரசியல் கட்சிகள் முயற்சி செய்து இந்த வீதிகளை புனரமைக்க வேண்டும். மக்களின் சந்தைகள், போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். காஞ்சுரமோட்டை கிராமத்திற்கு அரசியல்வாதிகள், மாகாணசபை உறுப்பினர்கள் சென்றிருக்கின்றார்கள் என்பதே கேள்விக்குறியாகவுள்ளது. அவர்கள் முகநூல்களின் மூலமாகவே அப்படியான கிராமங்கள் இருக்கின்றன என்பதை அறிகின்றார்களே தவிர அவர்களுக்கு அப்படியான கிராமங்கள் இருக்கின்றன என்பது தெரியாமலே உள்ளது.

காஞ்சுரமோட்டை, நயினாமடு, சின்னடம்பன் ஊடாக கனகராயன்குளம் செல்கின்ற இந்த மக்கள்கூட எந்தவிதமான போக்குவரத்து வசதிகளும் இல்லாமல் இன்று வரை தவிக்கின்றார்கள். 30 வருடங்கள் கடந்தும் இன்றும் இவை இல்லை. யுத்தம் நடந்து 10 ஆண்டுகள் நிறைவடைந்தும்கூட இன்றும் அந்த இடங்களுக்கு பஸ்போக்குவரத்துகள் இல்லை.

எனவே இந்த வீதிகள் புனரமைக்கப்பட வேண்டும். போக்குவரத்து வசதிகள் செய்ய வேண்டும். இந்த விவசாயிகள் தங்கள் பொருட்களை விற்பனை செய்வதற்கு சந்தை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இவை தொடர்பாக அரசியல் கட்சிகள் முடிவெடுக்க வேண்டும். அதனூடாகத்தான் எங்கள் பிர தேச சபையை அபிவிருத்தி செய்யலாம். மாணவர்களுக்குரிய போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இவற்றையெல்லாம் மேற்கொண்டாலேயே மக்களின் வாழ்வாதாரம் உயர்வடையும் என்பதில் எந்தவித மாற்றுக் கருத்தும் இல்லை என தெரிவித்துள்ளார்.

• • •

## சேவை செய்வதுதான் ... தொடர்ச்சி..

உண்டு. இதை இப்படியும் கூறலாம். எமது அரசியல் அந்தஸ்தை தீர்மானிக்கும் உரிமையும் எமக்கு உண்டு. நாம் இவற்றை மறுக்கும் சிறிலங்கா அரசின் கீழ் இருக்க வேண்டிய அவசியம் எமக்கில்லை. நாம் தமிழீழம் என்னும் தனிநாட்டுக்காகவே போராடுகின்றோம். ஆனால் அதே வேளை உலகில் நடைபெறும் புதிய அரசியல் மாற்றங்களையும் பார்க்கின்றோம். அதனால் நாமும் இறைமையுள்ள சுதந்திர அரசை அமைத்துக் கொண்டு, மற்ற அரசான சிறிலங்காவுடன் சமமான அந்தஸ்துடன் சேர்ந்து வாழ முடியும். அதை விடுத்து சிறிலங்காவின் அதிகாரத்துக்குள் எமது பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்றால் அது யாராலும் முடியாத விடயம். அதை நாம் ஏற்றுக் கொள்ளப் போவதுமில்லை” என மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் உலகுக்கு எடுத்துச் சொன்னார். அவர் இதனை அன்று 1991இல் தெளிவுபடுத்தியமையால் இன்று 29 ஆண்டுகளின் பின்னரும் இதுவே தமிழ் மக்களின் அனுபவ மொழியாகவும், உறுதியாகவும் இருப்பதையும் உலகறியும்.

கேணல் கிட்டு அவர்கள் தனது அன்பு மனைவி ஆன் சிந்தியா கிருஸ்ணக்குமார் அவர்களுக்கு 24.06.1992இல் புலத்தில் இருந்து எழுதிய இக்கவிதையின் இறுதி வரிகளில்“ ஓடுவதால் மீண்டும் மீண்டும் உறுதி பெறுகின்றேன் - நாம் ஓடாமல் இருப்பதற்கு – ஓர் சுதந்திர நிலம் அமைக்க வேண்டுமென்று”அழைப்பதும், அதற்குப் “போதிய உள உரம் வேண்டும்” என அவர் வலியுறுத்துவதும், புலப்பெயர்தலை நாட்டின் பிரிவாகஅல்லாமல்நாட்டுஉருவாக்கமுயற்சியாக (Nation building process) பயனுள்ளதாக மாற்றப் புலம்பெயர் தமிழர்கள் முயலவேண்டும் என அவர் விரும்பினார் என்பதை தெளிவாக்குகின்றன. இந்தத் தேச உருவாக்கம் தானாகவே என்ன செய்ய வேண்டுமென்ற ஆர்வத்துடன் இணையும் ஒரே நோக்கில் உள்ளவர்கள் ஒருவருக்கு ஒருவர் உள்ளத்திலும் சொல்லிலும் செயலிலும் ஒன்றிணைந்து செயற்படும் அர்ப்பணிப்பான வாழ்வின் மூலமும்,இத்தகைய ஈழத்தமிழரின் ஒன்றுபட்ட குரலாக அமையக் கூடிய திரள்நிலை ஊடக (Tamil Mass Media) இயக்கத்தின் மூலமுமே சாத்தியமாகும் என்றே அவர் ஊடகத்துறைக்கு முதன்மை கொடுத்துச் செயற்பட்டார். நாம் என்ன செய்கிறோம்? இருபது இருபதிலாவது புலம்பெயர் ஈழத்தமிழர்களும் உலகத் தமிழர்களும் அவர் வழி வாழ்வோம்.!

• • • •

# பொருளாதார அரசியல்

## தமிழ் மக்கள் கருத்தில் எடுக்கவேண்டிய தருணமிது

வேல்ஸ் இல் இருந்து **அருஸ்**

**ஆ**ங்கில புது வருடமானது பிறந்த சில தினங்களுக்குள் உலகில் பல சர்ச்சைகளைக் கிளப்பியுள்ளது. மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க நாடுகளில் 60,000 துருப்புக்களைக் கொண்ட அமெரிக்கா, ஈரனுடனான ஒரு வலிந்த போரை ஆரம்பிக்கும் வண்ணம் தாக்குதலை நடத்தியது ஒருபுறம் இருக்க ஈரான் அதற்கு பதிலடியாக ஏவுகணைகளை ஈராக்கில் உள்ள அமெரிக்கத் தளங்கள் மீது ஏவியுள்ளது.

இவ்வாறு உலக அரசியல் மிகவும் உறுதியற்ற தன்மையில் இருக்கையில் சிறீலங்காவின் அரசியல், ஏப்பிரல் இடம்பெறவுள்ள பொதுத் தேர்தல் தொடர்பில் தனது கவனத்தைக் குவித்துள்ளது.

1978ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட நிறைவேற்று அதிகாரமுள்ள அரச தலைவர் பதவியை மீட்டு எடுப்பதில் தீவிரமாக உள்ளார் புதிய அரச தலைவர் கோத்தபாயா ராஜபக்சா. அதாவது எல்லா அதிகாரங்களும் உள்ள பதவி அவருக்கு வேண்டுமாம்.

2015 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 19ஆவது திருத்தச் சட்டம் என்பது இரட்டை இயந்திரம் கொண்ட அரசியல் பொறிமுறை எனவும், அதனால் சிறீலங்காவின் அரசியல் உறுதித்தன்மை ஆட்டங்கண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள கோத்தபாயா தனது பதவிக்கு மேலும் அதிகாரங்களைச் சேர்ப்பதற்கன முயற்சிகளில் இறங்கியுள்ளார்.

அதாவது நவம்பர் மாதம் இடம்பெற்ற அரச தலைவர் தேர்தலில் வெற்றியீட்டியது போல பௌத்த சிங்கள மக்களின் வாக்குகளை கொண்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுவிடலாம் என அவர் எண்ணுகின்றார். எனவே தான் கோத்தபாயாவினதும், சிறீலங்கா பிரதமர் மகிந்த ராஜபக்சாவினதும் அண்மைய உரைகள் அனைத்தும் பௌத்த சிங்களத்தை அதாவது மகாவம்ச சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டனவாக உள்ளன.



எதிர்வரும் தேர்தலில் அவர் முன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுவிட்டால், தமிழ் மக்களின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தில் இருந்த சிறிய அதிகாரமும் இல்லாது போய்விடும். அதாவது விடுதலைப்புலிகளின் ஆயுதப் போர் மௌனிக்கப்பட்ட பின்னர், தமிழ் இனம் தனது அரசியல் அதிகாரத்தை முற்றுமுழுதாக இழந்துள்ளதாகவே கருத வேண்டியுள்ளது.

இந்த நிலையில் தமிழ் மக்களுக்கான அரசியல் அதிகாரத்தை பெற்றுக் கொடுப்பதற்கு இந்தியா முயற்சிக்குமா? என்ற கேள்விகள் அண்மைக் காலமாக எழுந்துள்ளன. ஆனால் அதற்கான சாத்தியங்கள் இல்லை என்பதை இந்திய வெளிவிவகார அமைச்சரின் கருத்தும், பேராசிரியர் கரோரி சிங் அவர்களின் கருத்தும் எடுத்துரைக்கின்றன.

சிறீலங்காவின் உள்நாட்டு விடயத்தில் இந்தியா தலையிடாது, இந்தியாவுக்கும் சிறீலங்காவுக்குமான உறவு என்பது நான்கு பரிமாணங்களைக் கொண்டது, 1980களில் அது ஆபத்தான உறவு, 1990 களில் அது சில வேற்றுமைகள் கொண்ட உறவு, 2000ஆம் ஆண்டுகளில் இந்த உறவு ஒத்துழைப்பாக மாறியது, 2010ஆம் ஆண்டில் இருந்து அது பங்குதாரர்களாக மலர்ந்துள்ளது என விபரித்துள்ளார் ராஜஸ்த்தான் பல்கலைக்கழகத்தின் தென்னாசிய பிராந்தியத்தின் கற்கை நெறிக்கான தலைவர் பேராசிரியர் சிங்.
அதாவது 13ஆவது திருத்தம் என்பது சிறீலங்காவைப் பொறுத்தது, சிறீலங்கா நிறைவேற்றினால்



அதனை நாம் கண்டு கொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

13ஆவது திருத்தச் சட்டத்தில் கொண்டு வரப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் இணைப்பை சிறீலங்காவின் உயர் நீதிமன்றம் 2006ஆம் ஆண்டு பிரித்த போதும், இந்தியா அது தொடர்பில் எந்த கருத்தையும் வெளியிடவில்லை.

அதனை மீண்டும் இணைப்பதற்கு இந்தியா உதவ வேண்டும் என்ற கோரிக்கைகள் 2017ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட போது, அதனை இந்திய வெளிவிவகார அமைச்சர் கருத்தில் எடுக்கவில்லை என்பதுடன், தற்போது பல வழிகள் திறக்கப்பட்டுள்ளன. அவற்றின் ஊடாக தமிழ் மக்கள் தமக்கான அரசியல் தீர்வைத் தேட வேண்டும் என அவர் தெரிவித்திருந்தார்.

அதாவது உள்ளக அரசியலில் தமிழ் மக்களின் பேரம் பேசும் சக்தி முற்றாக முடங்கிப் போயுள்ளதாகவே கருதப்படுகின்றது. உள்ளக அரசியலில் தோற்கடிக்கப்பட்டால், நாம் அடுத்து என்ன நகர்வை மேற்கொள்ள வேண்டும் என்பது தான் எமக்கு முன்னுள்ள கேள்விகள்?

இரண்டு ஒருங்கிணைந்த தெரிவுகளே உள்ளன, அனைத்துலக அரசியலின் ஊடாக பூகோள அரசியலில் எமக்கான பாதையை தேட வேண்டும், அதே சமயம் சீரழிந்து வரும் சிறீலங்காவின் பொருளாதாரத்தை மேலும் பாதாளத்திற்குள் தள்ள வேண்டும்.

ஆரசியல் பலத்தில் சிறீலங்கா பெரும் வெற்றியீட்டினாலும், பொருளாதாரத்தில் சிறீலங்கா மிகப்பெரும் தோல்வியை சந்திக்கும் நிலையிலேயே உள்ளது. அதன் பொருளாதார வளர்ச்சி 2019ஆம் ஆண்டின் பிற்பகுதியில் 2.7விகிதமாகவே உள்ளது.

அடுத்துவரும் 12 மாதங்களுக்கு சிறீலங்கா 6 பில்லியன் டொலர்களை கடன் மீள் செலுத்தும் நிதியாக செலுத்த வேண்டும். ஆனால் சிறீலங்காவின் கையிருப்பில் உள்ள நிதியானது 6.5 பில்லியன் டொலர்களே. இதனை கடனைச் செலுத்த பயன்படுத்தினால் சிறீலங்காவின் நிதி நிலை மிகவும் பாரதூரமான நிலையை அடையலாம் எனத் தெரிவிக்கின்றனர் சிறீலங்காவின் பொருளியல் நிபுணர்கள்.

இதனை ஈடு செய்வதற்கு வர்த்தகத் துறையில் சிறீலங்காவுக்கு புதிய பாதை ஏதும் உண்டா என்று பார்த்தால் 30 ஆண்டுகளுக்கு முன்னர் வர்த்தகத் துறையின் வரைபடத்தில் இல்லாது இருந்த வியட்நாம் தற்போது சிறீலங்காவுக்கான மிகப்பெரும் போட்டியாளராக மாற்றம் பெற்றுள்ளது. தொழில் நுட்பத்தில் பின் தங்கியுள்ள சிறீங்காவின் இடத்தை அது கச்சிதமாகப் பிடித்துள்ளது. யப்பான் உட்பட பல உலக நாடுகளின் அதிக முதலீடுகள் தற்போது வியட்நாமை நோக்கியே திரும்பியுள்ளன.

வியட்நாமின் உயர் தொழில்நுட்டத் துறையின் ஏற்றுமதி 2017 ஆம் ஆண்டில் 41 விகிதம், ஆனால் சிறீலங்காவின் ஏற்றுமதி 1 விகிதம்.

அதாவது கடன் அடிப்படையில் வேறு நாடுகளைச் சார்ந்து நிற்கும் நிலைக்கு சிறீலங்கா தள்ளப்பட்டு வருகின்றது.

சிறீலங்காவுடன் நெருக்கமான பிணைப்புக்களைக் கொண்ட இந்தியாவே 450 மில்லியன் டொலர்களை கடனாகவே வழங்கியுள்ளது. அமெரிக்காவின் மிலேனியம் சலஞ் உடன்பாட்டின் நிதியும் 440 மில்லியன் டொலர்கள் தான். ஆனால் அதற்காக அமெரிக்கா சிறீலங்காவிடம் கேட்பது, அமெரிக்கப் படை



யினர் ஆயுதங்களுடன் சிறீலங்காவின் எந்தப் பகுதியிலும் எந்த நேரத்திலும் தரையிறங்கலாம், சிறீலங்காவின் எந்த சடத்திற்கும் அவர்கள் உட்பட மாட்டார்கள். அது மட்டுமல்லாது, சிறீலங்காவின் எல்லா துறைமுகங்களையும், தளங்களையும் அவர்கள்தடையின்றி பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதே.

அதாவது தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பான பேச்சுக்கள் வரும் போது தனது இறைமை தொடர்பில் அதிகம் பேசும் சிங்களத் தலைவர்கள் தற்போது தாம் பட்ட கடனுக்கான வட்டியை கட்டுவதற்கே நாட்டின் இறைமையை விற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். எனவே தான் எதிர்வரும் ஏப்பிரல் 4ஆம் நாளுக்கு முன்னர்மிலேனியம்சலஞ்உடன்பாட்டைகிழித்து எறிவதற்கு தற்போதைய அரசு தயாரா என்ற கேள்வியை எழுப்பியுள்ளார், சிறீலங்காவின் புதிய

**தொடர்ச்சி 13ம் பக்கம்**



# தை திருநாள் அன்று மறக்க முடியாத ஜல்லிக்கட்டுப் போராட்டம்

கல்யாணி

இந்தியாவில் தைப்பொங்கல் மிக விமர்சையாக கொண்டாடப்படுகின்றது. நான்கு நாட்கள் கொண்டாடப்படும் பொங்கல் திருநாளில் போகிப் பொங்கல், உழவர் பொங்கல்(சூரியப் பொங்கல்), மாட்டுப் பொங்கல், காணும் பொங்கல் என நான்கு நாட்கள் பொங்கல் திருவிழா கொண்டாடப்படுகின்றது. பொங்கல் நிகழ்வின் போது அனைவராலும் எதிர்பார்க்கப்படும் நிகழ்வாக ஜல்லிக்கட்டு அமைகின்றது.

பொங்கல் கொண்டாட்டங்கள்

முதலில் போகிப் பொங்கல் பற்றி பார்ப்போம். மார்கழி இறுதி நாளை அதாவது தைப்பொங்கலுக்கு முதல் நாளை பழையன கழிதல் என்பதற்கமைய போகிப் பண்டிகையாக கொண்டாடுகின்றனர். பழந்துயரங்களைஅழித்துப் போக்கும் இப்பண்டிகையை முன்னோர்கள் “போக்கி’ என்றனர். அந்தச் சொல் நாளடைவில் மருவி “போகி’ என்றாகிவிட்டது.



இரண்டாம் நாள் கொண்டாடப்படுவது சூரியப் பொங்கல் ஆகும். இது உலகில் அனைத்து தமிழர்களாலும் கொண்டாடப்படும் ஒரு பொதுவான நிகழ்வாகும். உழைக்கும் மக்கள் இயற்கைத் தெய்வமாகக் கருதப்படும் சூரியனுக்கும், மற்ற உயிர்களுக்கும் சொல்லும் ஒரு நன்றியறிதலாக இப்பொங்கல் கொண்டாடப்படுகிறது.



அதே போல மூன்றாவது நாளாக, தங்கள் உழவிற்கு உதவி செய்த மாட்டிற்கு நன்றி தெரிவித்து மாட்டுப் பொங்கல் கொண்டாடப்படுகின்றது. இதுவும் பொதுவாக எல்லா நாட்டு தமிழ் மக்களாலும் கொண்டாடப்படும்.

நான்காவது நாள் நிகழ்வாக காணும் பொங்கல் கொண்டாடப்படுகின்றது. நெடுநாளாக கண் டிராத நமது உற்றார் உறவினரை காணும் இந்நாளை காணும் பொங்கல் என மக்கள் கொண்டாடுகின்றனர். இந்நாளில் தங்கள் உற்றார் உறவினரைச் சென்று சந்தித்து தங்கள் அன்பையும் உணவுப் பண்டங்களையும் பகிர்ந்து கொள்வர். பல்வேறு விளையாட்டுப் போட்டிகள், பட்டிமன்றம், உறி அடித்தல், வழுக்கு மரம் ஏறுதல் போன்ற வீர சாகசப் போட்டிகள் உட்பட பல்வேறு நிகழ்ச்சிகள் இடம் பெறும். இது பெண்களுக்கு முக்கியமான பண்டிகை ஆகும். பொங்கல் பானை வைக்கும்போது அதில் புது மஞ்சள்கொத்தினை கட்டி அதனை எடுத்து முதிய தீர்க்க சுமங்கலிகள் ஐவர் கையில் கொடுத்து ஆசி பெற்று அதனை கல்லில் இழைத்து பாதத்தில், முகத்தில் பூசிக்கொள்வார்கள். இது பண்டைய கால வழக்கமாகும்.

ஜல்லிக்கட்டு

உழவர் திருநாளில் முக்கியமான நிகழ்வாக ஜல்லிக்கட்டு அமைகின்றது. ஜல்லிக்கட்டை ஏறு தழுவல், மஞ்சு விரட்டு அல்லது ஜல்லிக்கட்டு (ஜல்லிக்கட்டு) என்று அழைப்பர். ஏறு என்பது காளை மாட்டைக் குறிக்கும். மாட்டை ஓடவிட்டு அதை மனிதர்கள் அடக்குவது, அல்லது கொம்பைப் பிடித்து வீழ்த்துவதான விளையாட்டே ஜல்லிக்கட்டாகும். தமிழர்களின் வீர விளையாட்டுகளில் ஒன்றாகக் கருதப்படும் இவ்விளையாட்டு, தமிழகத்தின் பெரும்பாலான மாவட்டங்களில் ஆண்டு தோறும் தைப்பொங்கல் திருநாளையொட்டி நடத்தப்படுகின்றன.

சல்லி என்பது விழாவின் போது மாட்டின் கழுத்தில் கட்டப்படுகிற வளையத்தினைக் குறிக்கும். புளியங் கம்பினால் வளையம் செய்து காளையின் கழுத்தில் அணியும் வழக்கம் தற்போதும் வழக்கத்தில் உள்ளது. அதோடு, 50 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த ‘சல்லிக் காசு’ என்னும் இந்திய நாணயங்களைத் துணியில் வைத்து மாட்டின் கொம்புகளில் கட்டிவிடும் பழக்கம் இருந்தது. மாட்டை அணையும் வீரருக்கு அந்தப் பணமுடிப்பு சொந்தமாகும். இந்தப் பழக்கம் பிற்காலத்தில் ‘ஜல்லிக்கட்டு’ என்று மாறியது. பேச்சுவழக்கில் அது திரிந்து ‘ஜல்லிக்கட்டு’ ஆனது என்றும் கூறப்படுகிறது.

2008 சனவரியில் பொங்கல் விழாவுக்குச் சில நாட்களுக்கு முன் ஜல்லிக்கட்டில் காளைகள் கொடுமை செய்யப்படுவதாகப் புகார் கூறி, விலங்குகள் நல வாரியம் மூலம் மேனகா காந்தி வழக்கு தொடர்ந்தார். இதனால் இந்திய உச்ச நீதிமன்றம் ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு இடைக்காலத் தடையுத்தரவு விதித்தது. ஒருசில கட்டுப்பாடுகளின் அடிப்படையில் ஜல்லிக்கட்டு நடத்த ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு மறுமுறையீடு செய்தது. இதனைத் தொடர்ந்து உச்ச நீதிமன்றில் மேன்முறையீடு செய்த போதும். ஏதோ ஒரு காரணத்தினால் ஜல்லிக்கட்டு நிகழ்வை மத்திய அரசு தடுத்தே வந்தது. 2014 மே 7இல் ஜல்லிக்கட்டு நடத்த தடை விதித்து உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. காளைகள் துன்புறுத்தப்படுவதால் ஜல்லிக்கட்டு நடத்தக் கூடாது என அந்தத் தீர்ப்பில் கூறப்பட்டது. 2011ஆம் ஆண்டின் சுற்றுச்சூழல் துறையின் அறிக்கையை மாற்றி இந்திய ஒன்றிய அரசு அனுமதி வழங்கியது. மீண்டும் உச்ச நீதிமன்றம் மூலம் 01-12-2016 அன்று மறுபடியும் தடை விதித்தது.

தங்கள் உரிமைகளைப் பெறவும், பாரம் பரிய கலாசார விளையாட்டான ஜல்லிக்கட்டை நடத்தக் கோரியும் 2017 சனவரி 16ஆம் திகதி மரீனா கடற்கரையில் சுமார் 75பேர் கூடி தங்களின் உரிமைகளுக்காக போராட்டம் ஒன்றை மேற்கொள்வதற்கு ஒன்று கூடினர். அன்று பிற்பகலில் 5000பேர் ஆகி, பல்லாயிரமானது. போராட்டம் 23ஆம் திகதி வரை இரவு பகலாக தொடர்ந்து நடைபெற்றது. பொதுமக்கள், மாணவர்கள் என அதிகரித்த போராட்டக்காரர்கள் அரசியல்வாதிகள், நடிகர்களை தங்கள் போராட்டத்தில் இணைக்க மறுத்தனர். முழுவதும் பொதுமக்கள் போராட்டமாக அமைந்தது. தலைமை என்ற ஒன்று இல்லாது, மக்கள் அனைவரும் புரிந்துணர்வுடன் போராட்டத்தில் இறங்கினர். ஆண்,பெண், குழந்தைகள், வயோதிபர்கள் என்ற அனைத்து தரப்பினரும் இரவு பகலாக கடற்கரையில் நின்று போராடினர். போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு உணவு, தண்ணீர், போக்குவரத்து வசதிகளை பொது மக்களே ஏற்படுத்திக் கொண்டனர்.



இதேவேளை சுகாதாரத்தைப் பேணவும் அவர்கள் தவறவில்லை. போராட்டத்தில் ஈடுபட்ட அனைவருமே குப்பைகளை அகற்றுவதிலும், தாங்கள் போராட்டம் நடத்தும் இடத்தை தூய்மையாகவும் வைத்திருக்கவும் முற்பட்டனர். உணவு, தண்ணீருக்கு எந்தவித தட்டுப்பாடும் இல்லாமல், பொது மக்கள் சரியான ஒரு ஒழுங்குமுறையைக் கடைப்பிடித்தனர் என்பதை குறிப்பிட வேண்டும். இதற்கு எவரும் பொறுப்பாகவோ, தலைமை தாங்கவோ இல்லை.

போராட்டத்தைகுழப்பும்வகையில்அந்தப் பிரதேச மின்விளக்குகளை அரசு அணைத்தது. இதனை எதிர்த்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அனைவரும் தங்கள் கைபேசிகள் மூலம் வெளிச்சத்தை ஏற்படுத்தினர். இது பார்ப்பதற்கு வானத்திலுள்ள விண்மீன்கள் கீழே இறங்கியது போல இருந்தது. போராட்டத்தை தடுப்பதற்காக பொலிசார்தடியடிப் பிரயோகம் மேற்கொண்டனர். கலைந்து போகுமாறு ஒலிபெருக்கி மூலம்



எச்சரித்தனர். ஆனால் போராட்டக்காரர்கள் இதை செவிசாய்க்கவில்லை. இந்தப் போராட்டங்கள் தைப் புரட்சி, மெரீனாப் புரட்சி,

தொடர்ச்சி 13ம் பக்கம்

# ஈரானிய படைத் தளபதி படுகொலை
## தெருச் சண்டியராய் செயற்பட்ட ட்ரம்ப்

கடந்த 03ம் திகதி(03.01.2020) அன்று ஈரானிய முதனிலைப் படைத்துறைத் தலைவர் மேஜர் ஜெனரல் காசெம் சுலேமானீ ஈராக்கில் வைத்து அமெரிக்க ஏவுகணைத் தாக்குதலில் கொல்லப்பட்டார். பாக்தாத் விமான நிலையத்தில் இருந்து காரில் அவர் புறப்பட்ட போதே இந்த தாக்குதல் நடத்தப்பட்டது. இத்தாக்குதலில் மொத்தம் 10பேர் கொல்லப்பட்டதாக அறிவிக் கப்படுகிறது.



இதன் பின்னான இன்று வரையான காலப்பகுதியில் அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையில் ஒரு மோதல் போக்கே காணப்படுகிறது. அமெரிக்காவும் அதன் தோழமை நாடுகளும் இஸ்ரேலுடன் இணைந்து மத்திய கிழக்கை துண்டாடி, தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க முயல்வதாக ஈரான் குற்றம்சாட்டி வருகிறது. மத்திய கிழக்கின் எண்ணெய் வளத்துக்காகவே அமெரிக்கா இத்தகைய நடவடிக்கைகளில் ஈடு பட்டு வருவதாகவும் ஈரான் தெரிவித்து வந்தது.
வளைகுடா பிராந்தியத்தில் ஈரான் தனது ஆதிக் கத்தை நிலைநாட்டும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாக அமெரிக்காவும் அதன் தோழமை நாடுகளும் குற்றம்சாட்டி வந்தன. ஈராக், யேர்மனி, சிரியா, லெபனான் போன்ற நாடுகளில் ஈரான் தனது படையினைரையும், வேறு ஆயுதக் குழுக்களையும் பயன்படுத்தி அந்நாடுகளின் ஸ்திரத்தன்மையை குலைக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவதாகவும் இவற்றுக்கு ஈரானின் புரட்சிகர ராணுவ படைப்பிரிவே பொறுப்பு என்றும் அவை மேலும் தெரிவித்தன.

ஆயினும் அமெரிக்காவுக்கு அடங்கி நடக் கும் மேற்குலகு மற்றும் சர்வதேச அமைப்புகள் எதுவும் இந்த நடவடிக்கைக்கு எதிராக குரல் எழுப்பவில்லை.

தனது நாட்டில் வைத்து ஈரானிய படைத் தளபதியும் தமது படை அதிகாரிகளும் அமெரிக்காவால் கொல்லப்பட்டமை ஈராக் அரசாங்கத்திற்கு பெரும்நெருக்கடியை ஏற்படு த்தியது.

இதன் விளைவாக ஈராக்கிய நாடாளு மன்றத்தில் அமெரிக்க படையினர் உள்ளிட்ட அனைத்து வெளிநாட்டு படைகளும் வெளி யேற்றப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. இது அமெரிக்கா எதிர்பாராத ஒரு பலத்த அடியென்றே கூறலாம்.

இந்த தாக்குதல் தொடர்பில், அமெரிக்க அரசியல் வட்டாரங்களில் சலசலப்புகள் காணப்பட்டன. தனக்கெதிராக பதவி நீக்க நடவடிக்கையில் இருந்து கவனத்தை திசை

ஈரான் புரட்சிகர ராணுவ காவல் படையின் (The Islamic Revolutionary Guard Corps (IRGC)தலைவர் காசெம் சுலேமானீயுடன் மேலும் நான்கு உயர் அதிகாரிகளும்(IRGC) கொல்லப்பட்டனர்.

அத்துடன் ஈராக்கிய சிறப்பு அசைவியக்க படைப்பிரிவின்(The Popular Mobilization Forces - PMF) துணைத் தலைவர் அபு மஹ்தி அல் முஹந்திஸ் உள்ளிட்ட ஐந்து ஈராக்கிய படையதிகாரிகளும் கொல்லப்பட்டனர்.

இந்த தாக்குதல் ஈரான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு இடையேயான பதற்றமாக மட்டுமே அமையாமல் முழு மத்திய கிழக்கிலும் பதற்றத்தை தோற்றுவிக்கும் ஒரு சம்பவமாக காணப்பட்டது. இந்த தாக்குதலுக்கு பதிலடியாக, ஈராக்கில் இருக்கும் அமெரிக்க கூட்டுப் படைகளின் இரு தளங்களை ஈரான் தாக்கிய சம்பவத்துடன் இந்த பிரச்சனை உலகளவிலான பதற்றமாக மாற்றம் பெற்றுள்ளது.

ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே யான மோதலானது, ஆறு தசாப்தங்களுக்கு மேலானது. ஈரானில் 1953 இல் அமெரிக்க CIAயின் தலையீடு இந்த மோதல்களுக்கான ஆரம்பப் புள்ளி எனலாம்.

தனியார் கம்பெனிகளால் பெருமளவில் சுரண்டலுக்கு உள்ளாக்கப்பட்டுவந்த ஈரானிய எண்ணெய் வளத்தை தேசியமயப்படுத்த முய ன்ற பிரதமர் முகமது மொசாடக் அமெரிக்கா மற்றும் பிரிட்டன் உளவுத் துறை 1953இல் சதி நடவடிக்கை மூலம் ஆட்சியில் இருந்து அக ற்றப்பட்டார். மக்களால் சனநாயக வழியில் தெரிவு செய்யப்பட்ட பிரதமரை அகற்றிய அமெரிக்காதனது கைப்பொம்மையான ஷாவை நாட்டின் தலைவராக நியமித்தது.

இவரின் கொடுமையான ஆட்சிக்கு எதிராக, மதத்த் தலைவரான அயதுல்லா கொமெனி குரல் கொடுத்தார். 1979 ஈரானில் இடம்பெற்ற இஸ்லாமிய புரட்சியில் அவர் தூக்கி யெறியப்பட்டார். ஈரான் இஸ்லாமிய குடியரசாக மாறியது.

இந்த நிலையில் தான் ஈரானிய புரட்சிகர இராணுவ படைப்பிரிவின் தலை வர் அமெரிக்காவால் ஈராக்கில் வைத்து கொல்ல ப்பட்டார். இந்த படுகொலையை ஆதரித்த முதல் நாடாக இஸ்ரேல் இருந்தது. நூற்றுக்கணக்கான அமெரிக்க படையினரின் இழப்புக்கு காரணமாக இருந்த காரணத்தாலும், அமெரிக்க இலக்குகள் மீது தாக்குதல் நடத்த சுலேமானி திட்டம் தீட்டியிருந்தமையாலுமே அவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக ட்ரம்ப் கூறினார்.




ஈராக்கின் உயர் மதத் தலைவரான ஆயத்துல்லா கொமேனிக்கு மிகவும் வேண்டப்பட்டவராகவும் அவருக்கு அடுத்த நிலையில் செல்வாக்கு மிகுந்த நபராகவும் விளங்கிய மேஜர் ஜெனரல் காசெம் சுலேமானீயின் படுகொலை ஈரானில் பலத்த அதிர்வலைகளை ஏற்படுத்தியது. அவரின் இறுதி நிகழ்வில் இலட்சக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். இந்த நடவடிக்கைக்கு அமெரிக்காவை பழி வாங்கவேண்டுமென்ற குரல்கள் அங்கு ஒங்கி ஒலித்தன.

ஒரு இறைமையுள்ள நாட்டின் படைத் தலைவரை. இன்னுமொரு இறைமையுள்ள நாட்டில் வைத்து படுகொலை செய்தமை அனை த்துத்துலக சட்டங்களை மதிக்காது நடத்தப்பட்ட ஒரு போர்க்குற்றம் என ஈரான் குறிப்பிட்டது.



திருப்பவே இந்த தாக்குதல் அமெரிக்க அதிபரால் நடத்தப்பட்டது என அமெரிக்க அரசியல் வட் டாரங்கள் குறிப்பாக சனநாயக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. அன்று தனக்கெதிராக பதவி நீக்க நடவடிக்கையின் போது ஈராக்கில் பில்கிளிண்டன் செய்ததை இன்று ட்ரம்ப் செய்கிறார் எனவும் அவை சுட்டிக்காட்டின.

சுரேன்

தனது படைத்துறை தளபதி படுகொலை செய்யப்பட்டமைக்கு பதிலடி வழங்கப்படும் என ஈரான் அறிக்கை விடுத்த போது அவ்வாறு எதாவது நிகழ்ந்தால் ஈர்க்கின் கலாசார பாரம் பரிய இடங்கள் உள்ளிட்ட 52 இலக்குகளை தாக்கு வோம் என ட்ரம்ப் கூறியிருந்தார்.

இதற்கு பதிலளித்த ஈரானிய வெளிவிவ கார அமைச்சர் 'நாங்கள் கோழைகள் அல்ல; சட்டப்படி சரியான இலக்குகளைத் தாக்குவோம்' எனக் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில் கடந்த செவ்வாயன்று (07.01.2020) ஈரானின் 22 ஏவுகணைகள் ஈராக்கில் உள்ள இரு அமெரிக்க கூட்டுப்படைத் தளங் களைத் தாக்கின. உள்ளூர் நேரப்படி புதன்கிழமை அதிகாலை 1.30 - 02:15 மணிக்கு இடையில் இந்த தாக்குதல்கள் நடந்துள்ளன.

அமெரிக்க படைத் தளங்களை தாக் கப் போவதாக, ஈரான் தமக்கு முன்கூட்டி அறிவித் ததாக ஈராக் கூறுகிறது. இத்தாக்குதல்களில் 80 அமெரிக்க படையினர் கொல்லப்பட்டதாக ஈரான் அறிவித்தது. எனினும் அமெரிக்காவும்

தொடர்ச்சி 13ம் பக்கம்

## ஈரானிய ... தொடர்ச்சி..

கூட்டுப்படைகளைச்சேர்ந்த ஏனைய நாடுகளும் தமது தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை எனக் கூறுகின்றன.

தாக்குதல் நடத்தப்பட்ட செய்தி வெளியாகியதும் பல்வேறு தரப்புகளில் இருந்து கண்டனங்கள் வெளியிடப்பட்டன. நேற்றோ அமைப்பின் செயலாளர், பிரித்தானிய பிரதமர் ஆகியோர் தமது கண்டனத்தை கடுந்தொனியில் வெளியிட்டனர்.

இரானின் வெளியுறவுத்துறை அமைச்சர் வெளியிட்ட செய்தியில், ''பிரச்சனையை மேலும் நீட்டிக்கவோ அல்லது போர் நடத்தவோ ஈரான் கோரவில்லை. ஆனால் எங்களின் மீதான வலி ந்த தாக்குதலை எதிர்த்து நாங்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வோம்'' என்று தெரிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பு இப்பிரச்சனையை ஈரான் இத்துடன் முடித்துக் கொள்ள விரும்புவதை கோடிட்டுக் காட்டுவதாக நோக்கர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஆனாலும் எதிர்வு கூறமுடியாத எதேச்சதிகார செயற்பாட்டாளராகிய அமெரிக்க சனாதிபதி ட்ரம்ப்பின் நடவடிக்கைகள் எவ்வாறு அமைந்திருக்கும் என்பதிலேயே முடிவா அல்லது மோதலா என்ற விடயம் பெரிதும் தங்கியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

## தை திருநாள் ... தொடர்ச்சி..

இளைஞர்கள் புரட்சி போன்ற சிறப்புப் பெயர்களால் குறிப் பிடப்பட்டன.

தமிழகத்தை தாண்டி வேறு மாநிலங்களிலும், இலங்கை உட்பட வேறு நாடுகளிலும் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு பெருகியது. சமூக வலைத்தளங்களின் வழியாகவே பெருந்திரளான இளைஞர்களைத் திரட்டி அமைதி வழியில் போராட்டங்களை நடத்தினர். சமூக இணையதளங்களின் வாயிலாக ஒருங்கிணைந்த இளைஞர்களும், கல்லூரி மாணவர்களும் இந்தப் போராட்டங்களை தொடர்ந்தனர்.

இந்தப் போராட்டத்திற்கு மத்திய அரசு பணிந்தது. தமிழர் பிரதேசங்களில் ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியது. இதனைத் தொடர்ந்து ஒவ்வொரு பொங்கல் நிகழ்வின் போதும் ஜல்லிக்கட்டு நடைபெற்று வருகின்றது.

இந்தியாவில் அதுவும் தமிழகத்தில் தமிழ் மக்களால் மேற்கொள்ளப்பட்டு வெற்றி கொள்ளப்பட்ட போராட்டமாக இது மட்டுமே அமைகின்றது. இதன் பின்னரோ இதற்கு முன்னரோ இப்படியான ஒரு போராட்டம் நிகழ்ந்திருக்க வாய்ப்பில்லை என்பதே மக்களின் கருத்தாக உள்ளது. போராட்டத்தின் மூலம் தமிழர்கள் தங்கள் கலாசார நிகழ்வை கொண்டாடுவதில் வெற்றி கண்டனர்.

## மாகாண சபை ... தொடர்ச்சி..

இருக் கலாம் என தமிழ்க் கட்சிப் பிரமுகர் சுட்டிக்காட்டுகின்றார். இதில் கவனிக்கப்பட வேண்டிய மற்றொரு விடயமும் இருக்கின்றது. மாகாண சபைத் தேர்தல் முறை தொடர்பான பிரேரணையைப் பாராளுமன்றத்துக்குக் கொண்டுவருவதை ராஜபக்ஷக்கள் தொடர்ந்தும் தவிர்த்துக் கொண்டால், மாகாண சபைகள் இல்லாத நிலையே தொடரும். அது காலப்போக்கில் பழகி விட கவர்னர் ஆட்சிதான் தொடரும்.

பாராளுமன்றத்தில் கடந்த வாரம் தமிழ்க் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சி ஒன்றின் தலைவரைச் சந்தித்த சிங்களக் கட்சி ஒன்றின் முக்கிய பிரமுகர் இப்படிச் சொன்னாராம். “ரணிலைப் பாதுகாப்பதற்காகவும், விக்கினேஸ்வரன் குறித்த அச்சத்தினாலும் மாகாண சபைத் தேர்தல்களை ஒத்திவைக்க நீங்கள் உதவினீர்கள். இனி மாகாண சபைகளே இல்லாத நிலைதான் தொடரப் போகின்றது.” அவர் சொன்னதில் பெருமளவு உண்மை உள்ளது. கூட்டமைப்பின் தூரநோக்கற்ற - இராஜதந்திரமற்ற சுயநல அரசியல் போக்கினால் குறைந்த பட்ச அதிகாரத்தை வைத்திருப்பதற்காக இருந்த மாகாண சபைகள் கூட இல்லாமல் போய்விடுமா என்ற கேள்வி தமிழ்ப் புத்திஜீவிகள் மத்தியில் இன்று எழுகின்றது.

## விடுதலை உணர்வை ... தொடர்ச்சி..

வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுத்துக் கொண்டு, அரசாங்கத்திற்கு காட்டிக் கொடுத்துக் கொண்டு யாராவது இருப்பார்களென்றால் சட்டங்கள் அவர்களை மறைக்கின்றது. அவ்வாறு செய்யாத அப்பாவிகள் இவ்வாறு தண்டனை பெறுகின்றார்கள். கட்டளையிட்ட விநாயகமூர்த்தி முரளிதரன் சுதந்திரமாக திரியும் போது அப்பாவிகளுக்கு தண்டனை வழங்கப்படுகின்றது. இதனை இனவாத நடவடிக்கைகளாகவே பார்க்கப்படுகின்றது. இதனையே இந்த நாட்டின் அரசாங்கங்கள் செய்து வருகின்றது. பாராளுமன்ற அமர்வுகளில் நாங்கள் இது தொடர்பில் வெளிப்படையாக கூறியிருக்கின்றோம். சிங்கள மக்கள் மத்தியில் இவ்வாறான பிரசாரங்களை கொண்டு செல்வது குறைந்தளவிலேயே நடைபெற்றுள்ளது. சில தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஊடாக இது கொண்டு செல்லப்பட்டாலும் அடிமட்ட சிங்கள மக்கள் மத்தியில் இவை கொண்டு செல்லப்படவில்லையென்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். இருந்த போதிலும் இந்தநாட்டில் என்ன நடந்துள்ளது என்பது இன்று பெரும்பாலான சிங்கள மக்களுக்கு தெரியும்.

**கேள்வி:**

**தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கத்தில் அது இன்று பயணிக்கின்றது என்று நீங்கள் கருதுகின்றீர்களா?**

**பதில்:**

தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்ட போது வடகிழக்கில் 70வீதமான நிலப்பரப்பு தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. ஆயுதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்ட நிலையில் அரசியல் ரீதியான செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற செயற்பாடுகளை முன்னெடுத்தது. அந்த பணியை அக்காலத்தில் சரியான முறையில் முன்னெடுத்தது. 2009ஆம் ஆண்டு வரையில் அந்த வேலைத் திட்டங்கள் சமாந்தரமான முறையில் முன்னெடுக்கப்பட்டன. போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் முழு பணிகளும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் கைகளில் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு பின்னர் தான் பல விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. பல திசைகளில் இருந்த விமர்சனங்கள் இன்று ஒரு திசையில் வந்துள்ளது. தமிழ் தேசிய கூட்டமைப்பின் மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். நாங்கள் என்ன நடவடிக்கைகளை எடுத்தாலும் சர்வதேசத்தின் செயற்பாடுகளுக்கு ஏற்ப எங்களை மாற்ற வேண்டிய நிலையிருக்கின்றது. முடிவுகளை எடுக்கும்போது சில தாமதங்கள் பின்னடைவுகள் ஏற்படுகின்றது.

**கேள்வி:**

**யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் வடகிழக்கில் தாயகம், சுயநிர்ணய உரிமை போன்ற கோட்பாடுகள் தமிழ் மக்கள் மத்தியில் அருகி வருவதாகவும் அதற்கான முழுப் பொறுப்பும் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்படுகின்றது தொடர்பில் என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

**பதில்:**

2015ஆம் ஆண்டு வரையில் வடகிழக்கில் தாயகம், சுயநிர்ணய உரிமை போன்ற கோட்பாடுகள் உணர்வு ரீதியாக இருந்தன. பல தேர்தல்களில் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு வடகிழக்கில் தமிழ் மக்கள் அமோக ஆதரவினை வழங்கியிருந்தனர். 2015ஆம் ஆண்டுக்கு பின்னர் நல்லாட்சி என்ற மகுடத்துடன் வந்த ஆட்சியில் எதிர் கட்சியில் இருந்து அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டதன் காரணமாகவே இவ்வாறான ஒரு கருத்து இருந்து வருகின்றது.

வடகிழக்கினை பொறுத்தவரையில் அபிவிருத்தி தேவையானது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு அபிவிருத்தியை கோரிய போது அவர்கள் உணர்வுகளை இழந்து விட்டார்கள், உரிமைகளை விட்டு விட்டார்கள் சுயநிர்ணய உரிமையினை விட்டுவிட்டு அபிவிருத்தி அரசியலுக்கு செல்கின்றார்கள், அமைச்சு பதவிக்கு ஆசைப்படுகின்றார்கள் போன்ற விடயங்கள் வெளிவந்தன. இவ்வாறான விடயங்கள் இளைஞர்கள் மத்தியில் ஊட்டப்படுகின்றது.

2009ஆம் ஆண்டுக்கு பின்னர் தோற்றம் பெற்ற இளைஞர்கள் இன்று இவ்வாறான நிலைகளுக்குஉட்படும்நிலையேற்பட்டுள்ளது. இவ்வாறான நிலையிலேயே தமிழ் தேசிய கூட்டமைப்பு கொள்கையில் இருந்து விலகி விட்டதா என்ற கேள்வியெழுகின்றது. விடுதலை தொடர்பான வழிநடத்தல்களை மேற்கொள்வதில் தமிழ் தேசிய கூட்டமைப்பு தாமதமடைந்துள்ளது என்பதை நான் ஏற்றுக் கொள்கின்றேன். விடுதலை உணர்வை எமது இளைஞர்களிடம் விதைத்து இனப்பிரச்சினைக்கான தீர்வு கிடைக்கும் வரையில் நாங்கள் உறுதியாக இருக்க வேண்டும் என்ற விடயத்தினை நாங்கள் கூறாமல் விடுவோமாகவிருந்தால் அது தமிழ் சமூகத்திற்கு நாங்கள் செய்யும் துரோகமாகவே இருக்கும் என்பதாகவே நான் கருதுகின்றேன்.

• • •

## பொருளாதார ... தொடர்ச்சி..

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா.

விடுதலைப்புலிகளின் போர் வியூகங்களில் கூட படைத் துறையும், பொருளாதாரமும் இலக்குகளாக இருந்தன. கட்டுநாயக்கா வான்படைத் தளத்திற்கு வழங்கப்பட்ட முக்கியத்துவமே அனைத்துலக விமான நிலையம் மீதான தாக்குதலுக்கும் வழங்கப்பட்டது. மத்திய வங்கி, உல்லாசப் பயணத்துறை என்பவற்றை அவர்கள் குறிவைத்ததும் சிறீலங்காவின் பொருளாதாரத்தை முடக்குவதற்காகவே.

நாம் ஒன்றை மட்டும் சிந்திக்க வேண்டும். பௌத்த அடிப்படைவாத சிந்தனையில் மூழ்கிப் போயுள்ள சிறீலங்கா அரசு தென்னிலங்கை அரசியலில் பெற்ற பலத்தைப் போல பொருளாதாரத்திலும் பெறுமாக இருந்தால், தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்கான போர் மிகப்பெரும் பின்னடைவைச் சந்திக்கும். அதனை முறியடிப்பதற்கான வழிகளைத் தேடுவதற்கோ அல்லது வியூகங்களை வகுப்பதற்கோ எம்மிடம் வளங்கள் உள்ளன.

தமிழ் சமூகத்திடம் பெருமளவான பொருளியல், இராஜதந்திர நிபுணர்கள் உள்ளனர். அவர்கள் தமது வளங்களை ஒருங்கிணைக்க வேண்டிய தருணமிது.

# பார்வையால் இன்பம் காணல் (Voyeurism)



இன்றைய உலகின் நாகரீக மாற்றங்களும், பாலியல் பற்றிய அறிவின்மையும் பாலியல் சார் நெறி பிறழ்வுக்கு இட்டுச் செல்கின்றன. ஆரோக்கியமற்ற வழிகளில் சமூகத்திற்கு ஏற்காத பாலியல் சார் செயற்பாடுகள் அனைத்தும் பாலியல் நெறி பிறழ்வுகளே. அதில் அதிகளவானோர் அறியாத ஒன்றே பார்வையால் இன்பம் காணலாகும். ஒருவன் பிறரது நிர்வாண உடலையும் பிறப்புறுப்புக்களையும், பிறரது பாலியல் நடத்தைகளையும் பார்ப்பதன் மூலம் பாலியல் ரீதியான இன்பத்தையும் மனநிறைவையும் பெற்றுக்கொள்ளுகின்றமை ஒரு பாலியல் கோளாறு ஆகும். ஆங்கிலத்தில் இது *Voyeurism* எனப்படும்

இதில் *Voyeur* எப்பொழுதும் ஏனையவரது பார்வையிலிருந்து மறைந்தே இருப்பார். வொயரிசம் ஒருவகையான அதீத பாலுணர்வு. வொயரிசத்தின் மாறுபட்ட வடிவமானது சிற்றின்ப உரையாடல்களை கேட்டல் மற்றும், தொலைபேசி மூலமான பாலியல் உறவையும் குறிக்கின்றது.

பார்வையால் இன்பம் காணலில் உடைகளை மாற்றும் போது, பாலியல் நடத்தைகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதை மற்றும் நிர்வாணமாக உள்ள நபர்களை பார்த்து சுயஇன்பம் அடைவதைக் குறிக்கும். பார்க்கின்ற, எட்டிப் பார்க்கின்ற செயற்பாடானது பாலியல் ரீதியான புத்துணர்ச்சியை பெறும் நோக்கிலேயே மேற்கொள்ளப்படும். பொதுவாக பார்ப்பவர் பார்க்கப்படும் நபருடன் பாலியல் ரீதியான தொடர்புகளையோ செயற்பாடுகளையோ வைத்திருக்க முனைவதில்லை.

பல அரசுகள், பார்வையால் இன்பம் காணலை ஒரு குற்றமாக கூறும் விதிகளை கொண்டிருக்கின்றன. பெரும்பாலான அரசுகள் ஒருநபர் அவரது வீட்டில் தனிமையில் இருக்கும் போதும், வேறு சில தனியார் இடங்களில் இருக்கும் போதும், அவரது அனுமதி இல்லாமல் புகைப்படம் எடுப்பதையோ வீடியோ எடுப்பதையோ தடுக்கிறது. *Langstram* மற்றும் *seto* என்போரின் ஆய்வில் *18-60* வயதுடையவர்களில் *2450* பேர் ஆய்வுக்குட்படுத்தப்பட்டனர். *12%* ஆண்களும், *41%* பெண்களும் குறைந்தது ஒரு தடவையாவது அடுத்தவர் உடல்உறவுகொள்வதை பார்த்து இன்பமடைந்ததாக கூறியுள்ளனர். அமெரிக்காவிலுள்ள கிராமத்திலுள்ள கல்லூரியை சேர்ந்த *60* ஆண் மாணவர்களில் மேற்கொண்ட ஆய்வில் *42%* மாணவர்கள் அடுத்தவரது பாலியல் உறவினை இரகசியமாக பார்ப்பதாகக் கூறினர்.

பார்வையால் இன்பம் காணலுக்கு எந்தவொரு விஞ்ஞான ரீதியான காரணமும் இல்லை. அனேகமான நிபுணர்கள் எதிர்பாராமல் ஒரு நபர் ஆடைகளை களையும் போது-பாலியல் நடத்தைகளில் ஈடுபடும் போது-நிர்வாணமாக உள்ளதை தற்செயலாக காணும் போது அந்த நடத்தையை கற்றுக் கொள்கிறார். மீண்டும் மீண்டும் அந்த செயலை வெற்றிகரமாக செய்யும் போது பார்வையால் இன்பம் காணபதற்கு உறுதியாக தள்ளப்படுகிறார்.

இக் கோளாறு ஏற்படுவதற்கான ஏதுவான காரணிகள் எவையென்று இதுவரை சரியாக அறியப்படவில்லை. ஆயினும் இந்தக் கோளாறுகள் ஏற்படுவதற்கு சிலகாரணிகள் கண்டறியப்பட்டுள்ளன.

பொதுவாக பரம்பரை மூலம் கடத்தப்படும் நிறமூர்த்தங்கள் மூலம் இந்த கோளாறு கடத்தப்படுகின்றதாக கூறப்படுகின்றது. அந்த வகையில் நிறமூர்த்தங்களில் ஏற்படும் மாற்றங்கள் நிறமூர்த்தத் திரிபுகள் என்பவை காரணமாக ஒரு சந்ததியில் இருந்து அடுத்த சந்ததிக்கு கடத்தப்படுகின்றது. குழந்தைப் பருவத்தில் பெற்றுக் கொள்ளும் அனுபவங்களும் ஒரு காரணியாகக் கொள்ளப்படுகின்றது. குழந்தைப் பருவத்தில் ஒரு பிள்ளை தனது நடத்தையை குடும்பம் மற்றும் சமூகத்தில் இருந்து அவதானிப்பின் மூலம் கற்றுக் கொள்கின்றது. இவ்வாறு கற்றுக் கொள்ளுகின்ற சந்தர்பத்தில் அப்பிள்ளை நேரான பண்புகளையும் கற்றுக் கொள்ளும் அதே சந்தர்ப்பத்தில் எதிரான சில பண்புகளையும் கற்றுக் கொள்கின்றது. எதிரான பண்பாக பார்வையால் இன்பம் அடைவதை கற்க ஆரம்பிக்கின்றது.



ஒரு நபர் சிறு வயதிலோ அல்லது கட்டிளமைப் பருவத்திலோ பாலியல் சார் துஸ்பிரயோகத்திற்குள்ளான சந்தர்ப்பங்கள் காணப்படுமாயினும் அப்பிள்ளை பாலியல் சார் விலகல் நடத்தைகளை மேற்கொள்ளத் திட்டமிடும். அதாவது பாலியல் சார் துஸ்பிரயோகம் காரணமாக அப்பிள்ளை பாலியலில் அதிக ஆர்வம் கொண்டவராகவோ அல்லது மாறாக பாலியல் சார் ஆர்வமின்மை கொண்டவராகவோ மாறுகின்றார். இவ்வாறு பாலியல் சார் ஆர்வமின்மை காணப்படுமாயின் குறித்த நபர் தனது பாலியல் இன்பத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக அடுத்தவர்கள் பாலியல் நடத்தையில் ஈடுபடுவதைப் பார்த்து தனது பாலியல் இன்பத்தினை அடைகின்ற தன்மை ஏற்படுகின்றது.

மேலும் ஒருநபர்தன்னைப்பற்றி தாழ்வான சுய மதிப்பீட்டினை ஏற்படுத்திக் கொள்ளும் சந்தர்ப்பத்தில் தான் அழகில்லாதவர் என்றும், தன்னால் எந்தப் பெண்ணையும் பாலியல் ரீதியாக சந்தோசபடுத்த முடியாது என்றும், தன்னை எந்தப் பெண்ணும் விரும்பமாட்டாள், தான் பாலியல் செயற்பாட்டுக்கு பொருத்தமில்லாதவன் என்ற தாழ்வான சுயமதிப்பீடுகளும் ஒரு நபரை பாலியல்நெறி பிறழ்வுக்கு இட்டுச் செல்கின்றன.

இச்சந்தர்ப்பத்தில் குறித்த நபர் தனது பாலியல் சார் இன்பத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக உயிரற்ற பொருட்களை மணத்தல், தொடுதல் என்பவற்றின் மூலம் சுய இன்பத்தினை அனுபவிக்கின்றார்கள்.

ர.தினேஸ் யாழ். பல்கலைக்கழகம்

ஒருவருக்கு பாலியல் நடத்தையை மேற்கொள்வதில் உடலியல் சார் குறைபாடுகள் காணப்படுமாயின் அந்த நபர் தனது பாலியல் இன்பத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக மாற்று வழியில் இன்பத்தை பெற எத்தனிக்கின்றார். ஆண்குறி விறைப்பின்மை, பாலியல் உறவின் போதான வலி போன்ற குறைபாடுகள் காணப்படும் போது குறித்த நபர் தனது பாலியல் இன்பத்தினை அனுபவிக்கும் பொருட்டு ஏனையோர் பாலியல் நடத்தையில் ஈடுபடுவதைப் பார்த்து தனது பாலியல் இன்பத்தை அனுபவித்து தனக்கு ஏற்படும் பாலியல் தேவையைப் பூர்த்தி செய்து கொள்கின்றார் .

பாலியல் சார் இன்பத்தினை அனுபவிக்கின்ற போது ஏற்படுகின்ற உளவியல் சார் தடைகளும் முக்கியமான காரணியாக உள்ளன. பாலியல் செயற்பாட்டில் ஈடுபடும் சந்தர்ப்பத்தில் அதிக வெட்க உணர்வு, தாழ்வு மனப்பான்மை, ஆர்வமின்மை, பயம் போன்ற உளவியல் ரீதியான வெளிப்பாடுகள் காணப்படுமாயின் குறித்த நபரால் பாலியல் இன்பத்தினை அனுபவிப்பதற்கு வேறு வழிமுறை நாடப்படுகின்றது. மேலும் பாலியல் சார் நெறி பிறழ்வுக்கு பாலியல் சார் அடிப்படை அறிவின்மை என்பதும் ஒரு காரணியாக உள்ளது. அதாவது பாலியல் சார் அறிவின்மை என்பது நமது சமுதாயத்தில் இன்று அதிகரித்து வரும் ஒன்றாகும்.

பார்வையால் இன்பம் காணும் பாலியல் நெறி பிறழ்வை கொண்டிருப்பவரை அடையாளம் காண்பதற்கு அவர்கள் பல்வேறு அறிகுறிகளை வெளிக்காட்டுவர். எதிர்பாராத ஒரு நபர் ஆடை மாற்றும் போது அல்லது பாலியல் நடத்தையில் ஈடுபடும் போது பார்த்தல்-மீண்டும் மீண்டும் தீவிரமான பாலியல் உணர்வுகளை தூண்டுவதுனான கற்பனைகள் பாலியல் தூண்டல்களில் ஈடுபடல்-நீலப்படங்கள் பார்ப்பதில் ஆர்வம் காட்டல்- ஒருநபரின் மறைவான பகுதிகளை உற்றுப்பார்த்தல் என்பன இனங்காணக்கூடிய அறிகுறிகள். பார்வையால் இன்பம் காண்பது ஒருமுறை மேற்கொள்ளப்படின் பொதுவாக இதைத் தடுக்கமுடியாது. காலப்போக்கில் பாலியல் ரீதியான மனநிறைவை பெற்றுக் கொள்வதற்கான பிரதானமான வடிவமாக இது மாறும். இதுவொரு நீண்டகால நோய்.

பாலியல் நெறி பிறழ்வான, பார்வையால் இன்பம் காணும் நடத்தையை உளமருத்துவர்களும், உள ஆற்றுப்படுத்துநர்களும் கட்டுப்படுத்த சிகிச்சை முறைகளை கையாளுகின்றனர். நடத்தை மாற்றுச் சிகிச்சை, உளக்கல்வியூட்டல், தளர்வுப் பயிற்சிகள், குடும்ப ஆற்றுப்படுத்தல், அறிகைச் சிகிச்சை, ஆழ்துயில் சிகிச்சை, ஆள்மைய சிகிச்சை என்பவற்றின் மூலம் இச் செயல்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்படுகின்றன.

◇◇◇◇